A SHORT HISTORY

OF

The Pandiya Kingdom

Under the Naik-Rulers.

A. D. 1559 - 1736.

(ILLUSTRATED)

BY

N. R. Subramania Sarma,

HEAD TAMIL PANDIT,

AMERICAN MISSION HIGH SCHOOL,

PASUMALAI.

E. M. GOPALAKRISHNA KONE.

Book-Seller, & Publisher,

Madura.

PRINTED AT THE

SRI RAMACHANDRA VILAS PRESS, MADURA.

RIGHTS RESERVED] 1916. [PRICE SIX ANNAS.

By the Same Author.

The Mystery of Kokilam—A Social Tamil Novel describing the importances of female education, true friendship, the vices of early marriages etc. Price 0 10 0

Kumanan—A Classical Tamil Drama showing the tacts of a Tamil poet and the generosity of a good king. (In the Press.) 0 6 0

Julius Cæser—Translated into Tamil. (will be out shortly.) 0 10 0

Notes on Baratam (Karna Paruvam.) 0 8 0

Copious Annotations on Kuchela Venba. 0 7 6

A prose Version of "**the Embassy of Krishna.**" A very useful book to help the Students of the **Intermediate Examination for 1917.** 0 2 0

Kumanan (a prose Version) 0 1 0

The Story of Tirumalai Naikkar (Illustrated) 0 1 6

The Story of Mangammal. 0 1 0

TO

R. G. GRIEVE Esquire M. A., F. R. G. S.,

Deputy Director of Public Instruction, Madras,

As a small token of gratitude

for his deep love & concern for the developement of

South Indian Vernacular Literature & History

This Book,

is

by kind permission

most respectfully dedicated

BY THE AUTHOR.

INTRODUCTION

'Nationality' 'Fatherland', 'Our Country' are expressions that convey an idea for which the most cultured nations of Europe are at present fighting at the cost of all their resources. That idea is not a mere abstraction or an idle sentiment that can be smothered or laid at rest as one may desire, but connotes one of the organic forces of nature which appears at a certain stage in the evolution of human society and which determines the fate of peoples and individuals. Among the elements that go to create and foster this social force—considered so precious and so dear by the nations of the west—not the least important is historic tradition. That all of us have been one in the past in race, religion, language and traditions strengthen the sense of national unity at present. In India the caste feeling is intense, the tribal feeling also is manifest, but the sense of nationality is still in the forming and every attempt to advance that spirit is worthy of encouragement.

Apart from these higher considerations and extended views of the utility of history we may lay stress on the importance of local history for the exclusive and insular reason that it is most intimately connected with our immediate surroundings, with things among which we live, move and have our being. Such ancient relics as the colossal foundations of an unfinished tower, a line of private dwellings whose interior is of massive arched construction, some solitary bald pillars, the remnants of a fort-gate, a colony of poople speaking a northern tongue, the signs of a disused aqueduct—call for an intelligent and satisfactory explanation if we would not blindly pass them by or be mere wondering spectators.

The Pandya country in particular is full of antiquities and historical remains which require to be described and accounted for. The abandoned fortress of Dindigul, the cave temple of Tirupparankundram with its Buddhist and Jain remains, the numerous Zemindaries each has a story of its own to tell, if we only knew how to read them. And the city of Madura itself is every inch of it from the Ganapathiendal to Iravathanallur, from the Andikadai Pottal

to the Mahal bound up with historic traditions and old world memories. The antiquity of the Setupathis, the origin of Ramesvaram as a place of pilgrimage, the growth of the present structure of the Minakshi Temple, the sources of the Sthala purana are among the unsolved problems of Madura history that may pay research; while on the problems of still earlier times as the age of the Tamil Sangam, the site of South Madura, the Aryan colonisation of the south, the least addition to the stock of our knowledge we would gladly have.

Again Hindu literature, whether Sanskrit or vernacular, is, it must be admitted, poorly represented in the department of history; we have 'puranas', 'itihasas' heroic poems, historical biography and vamsavalis but history proper in its natural vehicle of expression, namely easy well sustained prose is yet a desideratum and as a venture in that direction the following book will, I am sure, be welcomed by lovers of Tamil prose and students of history.

New Street,
MADURA.
16—3—'16.

K. RANGA RAU. B. A. B. L.

புறவுரை.

ஒருதேயத்தின் கல்வி, நாகரீகம், வியாபாரம், அரசாட்சி முதலியவற்றை அறிவதற்கு அத்தேய சரித்திரமும், ஏனைய நூல்களுமே ஏற்ற கருவிகளாகும். நந் தாய்மொழியில் சரித்திர நூல்கள் சொற்பமாயிருத்தலும், அவற்றையும் சிலர் அறியாதிருத்தலும் பெருங் குறையாமென்பதனை யுணர்ந்து, வழுதிநாட்டையாண்ட நாயக்கர்களின் சரித்திரத்தை என் சிற்றறிவிற் கெட்டியவாறு தமிழிற் சுருக்கி எழுதப் புகுந்தேன். ஈண்டெழுதுவான் விழைந்தது சரித்திர விடயமாதலின், அதனைப் பேரறிவாளரன்றி ஏனையரும் எளிதி லுணருமாறு பொறிப்பான் உன்னி மிக எளிய நடையில் இதனைத் தீட்டினேன்.

நாயக்கர்களுக்கு முற்பட்ட சரித்திரத்தை எழுதாது இதனை எழுதப்புக்கது யாது காரணம் பற்றியோவெனின், அவர்கட்கு முன்னிருந்த பாண்டிய மன்னரின் சரித்திரம் தொடர்ப்பாடிலாது இடந்தோறும் முரணுயிருத்தல் நோக்கியே என்க. அம்மன்னரின் சரிதையை ஆராய்வான்புக்கு மூவாட்டைக்கு மேலாகியும் அஃது இதுநாட்காறும் முடிவுறாமையின் இதுபொழுது நாயக்கர்களின் சரித்திரமட்டுமே வரைய நேர்ந்தது. இந்நூலின் சில பாகங்கள் முன்னரே பத்திரிகைகளிலும், புத்தகங்களாகவும் வெளிவந்துள்ளன. இந்நூல் வெளிப்போந்த பின்னர் இதற்காய சில ஆதாரங்

கள் கிடைத்தன. மெக்கன்ஸி துரையவர்கள் திரட்டிய பூர்வீக சரித்திர ஆதாரங்களும், மேனாட்டுப் பிரயாணிகள் அவ்வப்போது பொறித்த குறிப்புகளும், காதலிக் பாதிரிமார் வரைந்த பல நிருபங்களும், இச்சரித்திர ஆராய்ச்சிக்கு இன்றியமையாதன என்பதை நன்கறிவன். ஆயினும் தற்போது யான் அவற்றைப் பெற முடியாமையின் கிடைத்தவற்றைக் கொண்டே இதைத் தொகுத்தேன். அந்நூல்களில் எற்கு மாறுபாடாகத் தோற்றியவற்றைக் காரணங்களுடன் இதில் மறுத்துளேன்.

இதற்கு முகவுரை எழுதிய மதுரை நியாயவாதி ஸ்ரீமத் K. ரெங்கராவ் அவர்கட்கும், யான் செய்யுமிச்சிறிய உரிமைக்குடன்பட்ட, சென்னை வித்தியா இலாகா டிப்டி டிரைக்டர்கனம் R. G. கிரீவ் துரையவர்கட்கும், அபிப்பிராயங்களெழுதிய விழுமியோர்க்கும் நன்றிகூறும் கடப்பாடுடையன்.

இத்தகைய நூலை இதுபொழுதே முதன்முறையாக வெளியிடுவதாலும், சரித்திர ஆராய்ச்சியில் யான் வல்லனல்லனாதலாலும் இச்சிறு நூலில் வழுக்கள் பொதுளியிருக்கலாம். அவற்றைக் கண்ணுறும் பெரியோர் அவைகளைக் குறித் தனுப்பின் மறுபதிப்பைச் சீர்திருத்தத்துடன் வெளியிடுவன்.

மதுரை
1—4—16.

தெ.ரா. சுப்பிரமணிய சர்மா.

பொருளடக்கம்.

அதிகாரம்.	விஷயம்.	பக்கம்.
1.	பூர்வீக வரலாறு	1.
2.	விசுவநாத நாயக்கர்	6.
3.	குமாரகிருஷ்ணப்ப நாயக்கர்	13.
4.	கிருஷ்ணப்பநாயக்கரும், II விசுவநாதநாயக்கரும்	17.
5.	இலிங்கைய நாயக்கரும், விசுவப்ப நாயக்கரும்	18.
6.	முத்துகிருஷ்ணப்ப நாயக்கர்	19.
7.	முத்துவீரப்பநாயக்கர்	20.
8.	திருமலை நாயக்கர்	21.
9.	முத்து அளகாத்திரி நாயக்கர்	35.
10.	சொக்கநாத நாயக்கர்	37.
11.	இரங்க கிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கர் ...	40.
12.	மங்கம்மாள்	41.
13.	விஜயரங்க சொக்கநாத நாயக்கர்	54.
14.	மீனாட்சியம்மாள்	55.
15.	அரசியல்	56.
	அநுபந்தம்	64.

படங்கள்.

1. விசுவநாதநாயக்கர்.
2. குமார கிருஷ்ணப்ப நாயக்கர்.
3. கிருஷ்ணப்ப நாயக்கர்.
4. திருமலை நாயக்கர்.
5. புதுமண்டபம்.

T.S.P.P. MADURA. 16.

ஸ்ரீ

பாண்டிய தேச

நாயக்க மன்னர் வரலாறு.

முதலாம் அதிகாரம்.

பூர்வீக வரலாறு.

நமக்குப் பாண்டிய தேசத்தை யாண்ட நாயக்கர் வரலாறே விஷயமாயினும் அதற்குமுன் வழூதி நாட்டின் நிலைமையைப் பற்றிச் சிறிது அறிதல் சிறப்புடைத்தாம்.

இந்தியாவின் தென்பாகத்தில் பாண்டியதேசம் உளது. காலந்தோறும் அதன் விஸ்தீரணம் மாறுபட்டிருந்தது. ஆயினும் தற்போதைய திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களும், திருவாங்கூர் ராஜ்யத்தின் ஒருபாகமும் சேர்ந்ததே பாண்டிய நாடென்று ஒருவாறு கூறலாம். இத்தேசம் யாரால் எக்காலம் ஸ்தாபிக்கப் பட்டதென்று தற்போது நம்மாற் சொல்ல முடியவில்லை. ஆயினும் இது கிறிஸ்து சகாப்தத்துக்குப் பல்லாண்டுகட்கு முன்னரே செல்வமுற்றிருந்ததென்பதையும், மிகப்பூர்வீகமானதென்பதையும் மறுப்போர் எவருமிலர். இந்நாட்டின் முற்காலத்திய தமிழ் நூல்களையும் அன்ன அரங்கேறிய சங்கங்களையும் நூல் வாயிலாகச் சரித்திர ஆராய்ச்சி செய்தோர்க்கு இந்நாடு, நாகரீகம், வியாபாரம், கல்வி, பழக்க வழக்கங்கள் முதலியவற்றில் பஹூ உன்னத நிலை

யில் இருந்ததென்று நன்கு புலப்படும். கிரேக்கரும் ரோமர்களும் கூட அக்காலத்தில் மதுரையில் வந்து வியாபாரம் செய்துளர். அதன் அறிகுறியாக சில்லாண்டுகட்கு முன்னர் அத்தேயங்களின் நாணயங்கள் மதுரை நாட்டிற் பலவிடங்களிற் கிடைத்தன. சென்ற வாண்டில் வைகையிலும், இவ்வாண்டில் புதிய பஞ்சாலைக் கட்டிடத்தின் அருகிலும் அவை அகப்பட்டன.

தமிழ் மொழியைத் தாய்மொழியாய்க் கொண்ட பாண்டியர் திராவிட ஜனவகுப்பைச் சார்ந்தவர் என்ப. பாண்டியர்க்கு மீன்கொடி, வேப்பமாலை முதலிய பல ராஜ சின்னங்கள் பரம்பரையாய் உண்டு. அவரது நாட்டிற்கு வேறு வேறு காலங்களில வெவ்வேறு பதிகள் தலைநகராக இருந்தன. அவற்றிற் சில, புராண சம்பந்தமாய் இருந்து தற்கால சரித்திர ஆராய்ச்சிக்கு ஒத்தும், சில ஒவ்வாமலும் உள்ளன. அவை தெக்ஷணமதுரை, கபாடபுரம், கல்யாணபுரம், கொற்கை, உத்தரமதுரை என்பனவாம். இவற்றில், தெக்ஷண மதுரையும், கபாடபுரமும் ஜலப்பிரளயத்தில் அழிந்தனவாம். அவற்றோடு பல தமிழ் நூல்களும் நீருக்கு இரையாயின. இவற்றிற் கடைசியிற் கூறியஉத்தரமதுரையே பிற்காலத்தில் பாண்டியர்க்குத் தலைநகராயிருந்தது.

சிலர், தற்போதிருந்திருக்கும் மதுரை நகர் உத்தரமதுரையன்றென்றும், அது திருப்பரங்குன்றத்துக்குக் கிழக்கிலிருந்ததென்றும் கூறி, அதற்காதாரமாக "மாடமலி மறுகிற் கூடற் குடவயின்" என்பதைக் காட்டுவர். அஃதெவ்வாறாயினும், வடமதுரை ஆயிரக் கணக்கான வருடங்களாய்ப் பாண்டிவளநாட்டின் தலைநகர் என்பதற்கு ஐயமில்லை. இதில்

† உக்கிர பெருவழுதியின் காலத்தில் கடைச்சங்கம் ஓங்கி இருந்ததென்றார், அக்காலத்துத் திருக்குறள் முதலிய பன்னூல்கள் அரங்கேறின என்றும் தெரிகிறது. இச்சங்கத்திற்கு முன்னும், கி. பி. 10-வது நூற்றாண்டுவரையில் பின்னுமுள்ள சரிதை சிலவிடங்களில் தெரிந்தாலும் முழுதும்தொடர்ச்சியாய்த் தெரியவில்லை. * கி. பி. 128—140.

பிற்கூறிய காலவரைக்குட்தான் வைஷ்ணவ, சைவ, ஜைனமத ஏற்றத் தாழ்வுகள் உண்டாயின. அப்போதே, தேவாரம், திருவாய்மொழி முதலிய நூல்களும் புராணங்களும் செழித்தன. அன்றியும் கூன்பாண்டியர் க்ஷமண மதத்தைச் சேர்த்ததும், அவரது மனைவியின் வேண்டுகோளால் ஸ்ரீகாழியில்அவதரித்ததிருஞானசம்பந்தசுவாமிகள்மதுரையுற்று, க்ஷமணர்களால் தீர்க்கமுடியாத பாண்டியரின் சுரத்தைப் போக்கி, அவரைச் சைவராக்கி, விரோதிகளாய க்ஷமணரை வாதில் வென்று அவர்களை கழுவேறச்செய்தனர். இப்பாண்டியரது காலத்தை, எத்தனை சரிதநிரக்காரர்களிருக்கிறார்களோ அத்தனை விதமாய் பற்பலவாறு கூறுவர். ஆயினும் அவற்றில் ஒன்றேனும் ஆக்ஷேபமின்றி ஒப்பத்தக்கதாய் இல்லை.

சோழபாண்டியர்கள்:— பாண்டியர்கள் சுமார் 9-வது நூற்றாண்டு முடிய வாண்டார்கள். அதன் பின்னர் சோழர்கள் பாண்டியர்களை வெற்றிகொண்டு, பற்பல சமயங்களில் அவர்களைத் தங்கட்குட்படுத்திச் 'சோழபாண்டியர்' என்ற பட்டத்தோடு சுமார் 300 வருடங்கட்கு மேலேயே ராஜ்ய பாரந் தாங்கினார்கள். கி. பி. * * 907--1251

* இந்நூலிற் 'கி. மு.' என்றெழுதாத வருஷங்களை 'கி. பி.' என்றே கொள்க. † Tamils Eighteen Hundred years ago.
*சோழவமிச சரித்திர வரலாற்றில் 8,47-வது பக்கங்களைப்பார்க்க.

பிரந்தாகன் என்ற சோழனும், இராஜ இராஜேசுவர சோழனும் அவர்களில் முக்கியமானவர்கள். அவர்களை ஜயிக்க வேண்டுமென்று பாண்டியர்கள் எவ்வளவு முயன்றும் சரிப்படவில்லை. இவ்வாறிருக்கையில் பழைய பாண்டிய வமிசத்தைச் சேர்ந்த மாறவர்ம சுந்தர பாண்டியர் சோழரை ஜயித்துப் பாண்டியநாட்டை சுயேச்சையாய் ஆண்டார் அதற்குப் பிறகு வந்த ஜடவர்ம சுந்தர பாண்டியர் இலங்கையைப் படையெடுத்து ஜயித்து அங்கிருந்து மிகுந்த பொருள்கொண்டு வந்து தமதுநாட்டிற்கு அதிக நன்மை செய்தார். இவர்க்கு பிற் பட்டக்காரராகிய மாறவர்ம குலசேகர பாண்டியரும், II ஜடவர்ம சுந்தரபாண்டியரும் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர்கள்.

கி. பி. 906—946

இவ்வாறாகப் பாண்டியர்கள் மறுபடியும் சுயேச்சையாய் தமது நாட்டை ஆண்டனர்.

முகம்மதியர் 14-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் டெல்லியை யாண்ட அல்லாவுடீன் கில்ஜி என்பவருடைய சேனைப்பதி மாலிக்காபர் என்பவர் தென்னிந்தியாவைப் படையெடுத்து அங்குள்ள அரசர்களை வென்றும், ஊர்களைக் கொள்ளையடித்தும், முகம்மதிய மதத்திற் சேராதவர்களைக் கொன்றும் வந்தார். அவர் இராமேசுவரம் வரை சென்றதை அறிவிக்க அங்கு ஒரு ஜயஸ்தம்பமும் கட்டினார். மாலிக்காபர் மதுரையை எதிர்த்தபோது ராஜசிம்ம பாண்டியர் அரசராயிருந்தார். அவர் மாலிக்காபருக்குப் பயந்து மதுரையைவிட்டு பெரியகுளத்திற்கடுத்த சின்னமனூரில் மறைந்திருக்கும் பொழுது அங்குள்ள ராஜசிம்மேசுவரர் கோயிலைக் கட்டினார். சின்னமனூர் கோயிலில் உள்ள சாசனங்களால் இவ்விஷயம் நன்றாய்த் தெரிகிறது. மதுரையை ஜயித்த காபர் தம்முடைய ஆட்ச

ளில் ஒருவனை இந்நாட்டை யாளும்படி செய்து விட்டார். அதன்பிறகு சுமார் 50 வருஷகாலம் கி. பி. எட்டு முகம்மதிய அரசர்கள் மதுரை நாட்டை ஆண் 1315-1365 டார்கள்.

ஹோயஸ்லோ:— இந்தக் குலத்தைச்சார்ந்த ஹிந்து அரசர்களில் ஒருவர் துங்கபத்திரைச் கரையிலுள்ள ஹம்பியைத் தலைநகராக்கிக்கொண்டு விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்துத் தென்னிந்தியாவிலுள்ள எல்லா அரசர்களையும் தமக்குக் கப்பம் கட்டும்படி செய்தார். அவ்வரசர் மதுரையிலுள்ள முகம்மதியரைத் துரத்தும்படி தமது சேனைத் தலைவரான கம்பன்ன உடையாரை யனுப்பினார். அவர் மரபைச்சார்ந்தவர்களும், நாயக்கத் தலைவர்களும் விஜயநகரத் தரசருக் குட்பட்டு இந்நாட்டை மேற்பார்த்து வந்தார்கள். எனினும், இடையே அவர்களுக் குட்பட்டுப் பாண்டியர்கள் 1559வது வரை ராஜ்யாதிகாரம் செய்துவந்தார்கள். அவ்வருஷத்தில் வீரசேகரசோழர், சந்திரசேகர பாண்டியரைத் தோற்கடித்து இந்நாட்டைக் கைப்பற்றினார். பாண்டியரும் அவர் மகனும் விஜயநகரத் தலைவரிடம் போய் முறையிட்டுக்கொண்டார்கள். அவர் தமது சேனைத் தலைவராகிய நாகமநாயக்கரை அனுப்பி, தமக்குச் சிற்றரசனாயிருந்தும் தம் உத்தரவில்லாமல் மதுரையைக் கைப்பற்றிய சோழரைத் துரத்தும்படி சொன்னார். நாகமநாயக்கர் அவ்வாறே செய்து அரசனுடைய உத்திரவின்படி நாட்டைப் பாண்டியனிடம் ஒப்புவிக்காமல் தாமே அதையாளத் தொடங்கினார்.

இரண்டாம் அதிகாரம்.

விசுவநாத நாயக்கர்.

1559—1563.

இவ்வழுதிநாட்டில் நாயக்க வம்சத்தை ஸ்தாபித்தவர் விசுவநாத நாயக்கரே. இந்நாட்டின் சரித்திரத்தைப் படித்தால் பிற்காலத் தரசர்களில், இவர் செங்கோல் வழுவாச்சீர்த்தியர் என்று நன்கு விளங்கும். இவ்விடயம் இந்நாட்டுக்கு அவர் செய்த பல நன்மைகளால் நன்கு தெரியும். அவைகளைப் பற்றி அறியுமுன் இவர் யாவர் என்றும், எவ்வாறு அரசர் ஆனார் என்றும் கூறுவாம்.

சென்ற அதிகாரத்தில் நாம் கூறிய நாகம நாயக்கரின் ஏகபுத்திரர் இவர். இவரைப் பெறுவதற்கு நாகமநாயக்கர் காசியாத்திரை சென்றார். அவ்வாறு பெற்ற சுதர் அப்பால் மதுரைக்கு மன்னர் ஆனாரென்று சொல்வதாலும், அச்சமயம் அவருடைய பிதா வலியுற்று உயிரோ டிருந்ததாய்ச் சொல்லப் படுவதாலும், அப்பொழுது விசுவநாத நாயக்கருக்குச் சுமார் 35 வயதென்று வைத்துக்கொண்டால் இவர் பிறந்த வருஷம் ஏறக்குறைய 1524 ஆகும். இவர் சிறுவயதுமுதலே படைப் பயிற்சி முதலிய போர்த் தொழில்களைப் புரையறக் கற்றார்; இளமையிலேயே விஜயநகர சக்ரவர்த்தியின் சேனையிற சேர்ந்து போர்புரிந்து புகழ் அடைந்தவர். நாம் கூறிய காலத்துக்கு இவர் முற்பட்டவர் என்றும் சிலர் கூறுவர்.

இவர் தமது தகப்பனாரை வென்ற விதத்தை இன்னதென ஆறிவாம். முன்னமே நாகம நாயக்கர் பாண்டியதேசாதிபதியான சங்கதியைக் கூறினோமன்றோ? அவர் அவ்வாறு செய்தது விஜயநகர சக்கரவர்த்தியின் காதுக்கெட்டவே, அவர் அடங்காக் கோபங்கொண்டு நாகமரைத் தண்டிக்

விசுவநாத நாயக்கர். 1559–1563. [பக்கம் 6.]

T. S. P. P. MADURA.

கக் கருதி ஒருபெரிய சபைகூட்டிப்படைத்தலைவரை வினவித்து, "ராஜத் துரோகியாகிய நாகமர் தலையை என் முன் கொணர் வார் யாரேனும் உளரோ" என வினவினர். எவரும் எழுந்து மறுமொழி கூறவில்லை. §ராயர் மறுமுறையும் அவ்வாறே செப்பினர். மகா சுத்தவீரராகிய நாயக்கரை எதிர்த்துச் செல்ல எவரும் துணிந்திலர். ஆயினும் ஒருவர் அவ்வாறு செய்ய முன் போந்தனர். அவர் மொழியை ராயர் முற்றிலும் நம்ப முடியவில்லை. ஏனெனில் நமது விசுவநாத நாயக்கரே தமது பிதாவின் தலையை ராயருக் கர்ப்பணம் செய்வதாய் உறுதிகூறினர். பின்னர் ஒருவாறு ராயருக்கு விசுவநாதரி டம் விசுவாசம் பிறந்ததால் பெருஞ்சேனையோடவரை மது ரைக் கனுப்பினர்.

விசுவநாதர் இவ்வாறு செல்லத்துணிந்ததற்கு அவரது ராஜபக்தியே காரணமன்றி வேறு எவ்வித சுயநபமும் அன்று. விசுவநாதர் பாண்டிய நாட்டை அடைந்து தமது பிதாவோடு போர்புரிந்து அவரை வென்று சிறைப்படுத்தி உயிருடன் ராயர் முன் கொண்டுபோய் நிறுத்தினர். அம்மம்ம! இத்த கைய காரியம் செய்யும் வீரரை உலகிற் காண்பதரிதன்றோ? விசுவநாதரின் ராஜ விசுவாசமும் வீரமும் புயவலியும் இத் தன்மைத்தென உணர்ந்த ராயர் மகிழ்ச்சியுற்று அவர் வேண் டிய வரங்களைக் கொடுப்பதாய் சொன்னர். நாயக்கர் தமது பிதாவிற்கு உயிர்ப்பிச்சை கொடுக்க வேண்டுமென்று பரசு ராமரைப் போற் கேட்க, அவரும் மனமுவந் தவ்வாறே ஈந்த னர். அன்றியும் விசுவநாதரை மதுரைநாட்டுக்குத் தலைமுறை தத்துவமாய் * காவலர் ஆக்கினர்.

---

§ 'ராயர்' என்பது விஜயநகரத்தாரின் பட்டப்பெயரென வறிக.

* காவலர் என்ற பதம் Governer என்ற ஆங்கல மொழியின் பொருளில் இந்நூலில் பிரயோகிக்கப்பட்டுளது.

விசுவநாதர் மதுரைக்குச் சென்று, தமது சக்கரவர்த்தியின் உத்திரவின்படி பழையபாண்டிய மன்னரைச் சிங்காதனத் திருத்தினர். ஆனால் இது முதல் திருமலை நாயக்கர்வரை பாண்டியர் பேருக்கு மட்டுமே அரசராயிருந்தார். இதைப் பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் இருப்பினும் முடிவில் எல்லாம் ஒரே விஷயத்தையே தெரிவிக்கின்றன—அதாவது, இக்கால முதல் பாண்டியவமிசப் பெயர் சரித்திரத்தினின்று அநேகமாய் மறைந்த தென்றும், நாயக்கர்களே விஜய நகரத் திற்குட்பட்டு ஆண்டார்கள் என்றும், விசுவநாதர் மதுரைக்கு வந்திராவிட்டால் இதன் சரித்திரமே மாறுபட்டிருக்கலா மென்றும் கூறுவதாம்.—

அக்காலத்தில் நாட்டில் எங்குப் பார்த்தாலும் பலவிதக் குழப்பங்கள் இருந்ததாலும், திருடர்பயம் அதிகமாய் இருந்ததாலும், நீர்ச்சுருக்கத்தால் விவசாயம் குறைந்திருந்ததினாலும், சக்தியற்ற பாண்டியனால் ஏதுவும் செய்ய இயலாமல் இருந்தமையாலும், சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே ராஜாங்கம் ஒரு நிலையுறாதிருந்தமையாலும் விசுவநாதரே ராஜ்யபாரம் முற்றிலும் ஏற்றுக்கொண்டு நாட்டிற்கு வேண்டியவற்றை அறிந்து செய்யவேண்டியதாயிற்று. முதலில் அவர் தமது நண்பராகிய * அரியநாயக முதலியாரைத் தமது தளவாயாக ஏற்படுத்திக் கொண்டார்.

மதுரையை வளைந்த பழைய கோட்டைகளை இடித்து புதிய அரண்களை எழுப்பினர் அது பிற்காலத்தில் சௌகரியத்தின் பொருட்டு இடிக்கப்பட்டாலும் அதன் சின்னங்களை இன்றும் நாம் கண்ணுறலாம். இவரே வைகையில் பேரணை,

* இவரை, அரியநாத முதலியார், ஆரியநாயக முதலியார் என்றும் வழங்குவர்.

சிற்றணைகளைக் கட்டுவித்து, ஜலத்தைப் பல கால்வாய்களின் வழியே திருப்பி விவசாயத்திற்கு அதிக உதவிபுரிந்தார். இவ்வாறு இவர் பல காரியங்களைச் செய்வதற்குப் போதிய பணம், தமது பிதா விஜயநகரத்தில் தேடிவைத்ததிலிருந்தும் அரியநாயகர் மனமுவந்தீந்த செல்வத்தினாலும் கிடைத்த தென்ப. இதனால் விசுவநாதர் அரியநாயகர் ஆகிய இருவரின் தாராளசிந்தையும், பொதுநலப் பிரியமும் இத்தன்மையதென விளங்குகிறது. இன்னும் பல சீர்திருத்தங்கள் நாடெங்கும் நாட்டப்பட்டன.

இராமேசுவரம் ஸ்ரீரங்கம் முதலிய யாத்திரை ஸ்தலங்களுக்குப் போகும் பிரயாணிகளுக்கு உண்டான பயத்தை நீக்க எண்ணினார். அதற்காக ரஸ்தாக்களிற் காவற்காரர்களை ஏற்படுத்தினார். தமக்குச் சொந்தமான வல்லம் கோட்டையைச் சோழருக்குக் கொடுத்துவிட்டு அவருக்குச் சொந்தமான திருச்சிக் கோட்டையைத் தாம்பெற்று அதை நன்கு கட்டினார். அதனால் பல ஜனங்கள் அங்கு வந்து குடியேறினார்கள். ஸ்ரீரங்கத்துக் கோயிலிலும் சில சீர்திருத்தங்கள் இவ்வாட்சிக் காலத்தில் நடந்தேறியன.

விசுவநாத ரிவ்வாறு வடக்கே வேண்டியவற்றைச்செய்து கொண்டிருக்கையில் அரியநாதர் திருநெல்வேலியில் ஏற்பட்ட ஓர் குழப்பத்தைக் கவனிக்க வேண்டியதாயிற்று. அங்கே பஞ்சபாண்டவர் என்ற ஐவர் விசுவநாதரது ஆட்சியை ஒப்புக்கொள்ளவில்லை. இவ்வைவர் யாவரென்று நன்கு தெரியாவிட்டாலும் சில நூலாசிரியர், இவரை, நாம் முற்கூறிய சந்திரசேகர பாண்டியருடைய பிதாமகற்கு காமஸ்திரீ மூலம் வந்த புத்திரராயிருக்கலா மென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்களுக்குத் தென்னாட்டில் செல்வாக்கு மிகுதியா

யிருந்தது. அரியநாதர் அவர்களுக்கு நன்மொழிகளும் உரைத்தனர். அதற்கவர்கள் இடங்கொடுக்கவில்லை. பிறகு பய முறுத்தியும் பார்த்தார். அதுவும் பயன்படா தொழிந்தது. முடிவில் திடீரெனத் தளவாயை அவர்கள் எதிர்த்ததாலும், அவரிடம் போதிய சேனையில்லாததாலும், உடனே மதுரைக்குத் திரும்பிவந்து நடந்தவற்றை அவர் நாயக்கருக்கு அறிவித்தனர்.

விசுவநாதர் போருக்குச் சிறிதும் புறங்கொடா வியல்புடையவராதலால் தளவாயைக் கூட்டிக்கொண்டு பெருஞ் சேனையோடு தாமே நேரிற் சென்றார். ஆனால் பாண்டவர்க்குச் சேனையும் பணமும் போதிய அளவு இல்லாமையால் இவர்கள் நாயக்கரை எதிர்க்க முடியாமல், கோரில்லாக் குரங்குகள் மாதிரி சண்டைசெய்யத் துணிந்தனர். முடிவில் நாயக்கர் ஒருவரே அவ் வைவரோடும் தனித்துப் போர்புரியச் சித்தமாய் இருப்பதாயும், அச்சண்டையில் பாண்டவர் தோற்றால் நாட்டைவிட்டுப் போக வேண்டுமென்றும், ஜயித்தால் நாடு அவர்களுடையதே என்றும் நவின்றனர். அவர்களும் அவ்வாறு ஒப்புக்கொண்டதோடு தனித்தனியே எதிர்க்கவும் சம்மதித்தார்கள். அதற்கு நாயக்கரும் ஒப்பினர். பின்னர் அவ்வைவரும் வெல்லப்பட்டனர். நாயக்கர் திருநெல்வேலியைக் கைவசமாக்கிக் கொண்டு, அந்தஜில்லாவிலும் முன் மதுரையிற் செய்தது போலவே பல நன்மைகளைச் செய்தார். அதனால் ஜனங்கள் அவர்மேலதிகப் பிரியம் வைத்தனர். இக்காரியங்களைச் செய்த பிறகு மதுரை நாட்டில் கப்பம் கொடாதிருந்த கம்பம் கூடலூர்த் தலைவனை எதிர்த்துத் தனக்குட்படுத்திப் பல நன்மைகளை அங்குப் புரிந்தனர். இதுமுதல் இந்த நாயக்கருக்குச் சண்டை செய்ய வேண்டியதில்லாததாலும், தேசம்முற்றும் சமாதானமாய் இருந்ததாலும் அவர்

உள்நாட்டுச் சீர்திருத்தங்களைச் செய்தார். பின்பு தமது வமிசத்தை நிலைபெறச் செய்யத்தக்க காரியத்தை நாடினார். இந்த நாயக்கர் முதன் முதல் மதுரைக்கு வருகையில் அவரோடு போந்த பல தெலுங்கவீரர்களுக்கும், இன்னும் தமிழ்நாட்டிலிருந்து உதவிகொடுத்தார்க்கும், பாண்டியரைச் சேர்ந்த பரிவாரங்கட்கும் பரிசளிக்க வேண்டியிருந்தது. அதுசெய்யாதிருந்தால் அத்தலைவர்கட்கு மனவருத்த முண்டாவதால் அடிக்கடி கலகங்கள் பெருகும். ஆதலால், நாயக்கர்பாண்டி நாட்டை 72 பாளையப்பட்டுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாளையக்காரனுக்குக் கொடுத்து விரோதிகள் வரும்போது அவனவன் தன் தன் சேனையுடன் வந்து நாட்டைக் காக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தார்.

இத்தகைய ஏற்பாடுகளை இயற்றுவதற்கு நாயக்கருக்கு தவி புரிந்தவர் அரியநாயகரே. இவ்விருவருடைய தன்மையைச் சொல்ல இந்நூலில் இடம்போதாது. இவ்வரியநாயகர் காஞ்சீபுரத்தில் மிகவும் எளிய, வேளாள குலத்திற் பிறந்தவர். தாமடைந்த சீர்த்தியால் விஜய நகர சக்கரவர்த்தியின் சிறந்த மந்திரியாகவும், தந்திரியாகவும் ஆயினர்; அப்பால் நாகம நாயக்கரை வெல்வதற்கு விசுவநாதரோடு வந்து மதுரையிலேயே தங்கினர். இவரே மதுரைப் பதியிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தை வெகு அழகாகக் கட்டி முடித்தார். அதில் நுழைந்தால், இடது கைப்பக்கத்து முதல் வரிசை முதற்றூணில் அரியநாயக முதலியாரின் கற்சிலை காணப்படும். மண்டபத்தின் விசித்திர அமைப்பையும், சிற்பத்தையும் அறியாத சிலர் அதன் அதிகத் தொகையுள்ள தூண்களையே வியந்து புகழ்ந்தெழுதினர். அவர் அதின் உண்மையான பெருமையை உணர்ந்திலர் போலும். இதன் முழுப்பெருமையை



குமாரகிருஷ்ணப்ப நாயக்கர்
1563 — 1573 [பக்கம் 13]

T. S. P. P. MADURA.

மூன்றும் அதிகாரம்.

---

* குமார கிருஷ்ணப்ப நாயக்கர்.

1563—1573.

இவர் தமது பிதாவைப் போலவே நற்குணங்களும், ராஜதந்திரமும், அஞ்சா நெஞ்சுடைமையும் வாய்ந்தவர். இவர் காலத்தில் பலமுக்கியமான சம்பவங்கள் தெக்ஷிணத்தில் நிகழ்ந்திருக்கின்றன. இவர் அரசரான இரண்டு வருடங்கட்கெல்லாம் முகம்மதியருக்கும், விஜயநகர ராயருக்கும் நெடுங்காலமாகவிருந்த சண்டை முற்றியது. அச்சமயம் அரியநாயகரது சேவகம் ராயருக்கு அவசியமாயிருந்ததால் அவர் வடநாடடைந்தார்.

குமாரகிருஷ்ணப்பர் தனித்திருக்கும் சமயம் பார்த்திருந்த தும்பிச்சி நாயக்கர் பல பாளையக் காரர்களைச் சேர்த்துக் கொண்டு அவரை எதிர்த்தார். அரியநாயகரும் தெனனாட்டிற்கு அக்காலம் வரமுடியவில்லை. தும்பிச்சி பெருஞ்சேனையோடு வெளிப்பக்கங்களிற் பிரவேசித்து நாட்டின் பல பகுதிகளை தமக்குட்படுத்தி, பரமக்குடியில் நன்கமைக்கப்பட்ட பாதுகாப்பான கட்டிடத்தி லிருந்தார். இது விஷயம் கிருஷ்ணப்பருக் கெட்டிற்று. இவர் இத்தகைய குழப்பத்தை எதிர்பார்த்திருந்தவரேயல்லர். அவ்வாறு எதிர்பார்க்கக் காரணமுமில்லை. அவரது பிதா எத்தனையோ தண்டத் தலைவர்க்குத் தகுந்த உதவி புரிந்தும் நாட்டின் முன்னேற்றத்திற்காக அதிகப்பாடுபட்டு மிருந்தனரன்றோ?

நாயக்கர் சிறிதும் தாமதியாது தமது தலைநகருக்கு வேண்டிய காவலைச் செய்தார். மருவலரை யடக்க சேவப்பர் என்ற

---

* இவருக்குப் பெரியகிருஷ்ணம நாயக்கர் என்றும் பெயருண்டு.

தண்டத்தலைவரைத் தமது சேனையோடனுப்பினர். அவர் சில தினங்களில் விரோதியாற் கொல்லப்பட்டார். பிறகு சேவப்ப நாயக்கரின் குமாரர் சேனைத்தலைவராக்கப்பட்டார். அவர் தமது அன்னையின் பழிக்குப் பழிவாங்கவெண்ணி விரோதியைப் பலமாய்த்தாக்கி வெற்றியுற்றதுமன்றி மற்றப் பாளையக்காரரும் அஞ்சுமாறு தும்பிச்சியின் தலையைஅறுத்து நாயக்கருக்கு அனுப்பினார். இவ்வாறாக இக்கலகம் நாயக்கருக்கு நலமுண்டாக்கிற்று. எவ்வாறெனின், இனிஇத்தகைய காரியத்தைச் செய்ய எவரும் கனவிலும் நினையாரன்றோ? நாயக்கர், ராஜதந்திரியாதலின் தும்பிச்சியின் பிள்ளைகள்மேல் குரோதங்கொள்ளாமல் பரமக்குடியை அவர்களுக்குக் கொடுத்து, மூத்தவனை 'பாளையக்காரன்' என்ற பட்டம் வகிக்கவும் உத்திரவளித்தார்.

இச்சண்டைக்குப் பிறகு இன்னொரு முக்கிய நிகழ்ச்சி இவ்வாட்சியில் நிகழ்ந்தது. அது இலங்கைப்படையெழுச்சியே. முற்கூறிய தும்பிச்சியின் கலகத்துக்கு வேண்டிய உதவி கண்டிராஜா செய்தனர் என்ற விஷயம் நாயக்கருக் கெட்டிற்று. உடனே அவர் சுமார் 52 பாளையக்காரர்களையும், அவர் பந்துக்களையும், படைகளையும் திரட்டிக்கொண்டு, முதலில் ராமேசுரத்திற்றங்கி, பிறகு சமுத்திரத்தைக் கடந்து இராமரைப் போல் இலங்கை யடைந்து, தாம் போர்க்கு நேர்ந்த வரலாற்றை அவ்வரசருக்குத் தெரிவித்தார். அவ்வரசரோ மதுரைக் காவலர் இவ்வாறு வருவாரென்று நினைத்தவரல்லர். ஆயினும் அவர் 40,000 மனிதர்களை 4 மந்திரிகளின் கீழ் அனுப்பினர். அச்சேனை 'பட்டாள' மென்ற இடத்தில் விரோதிகளை எதிர்பார்த்திருந்தது.

கிருஷ்ணப்பர் தமது படையைச் சரியான நிலையில் வைத்துக் கொண்டு விரோதிகளைப் பொருதார். இருதிறத்தார்க்கும் மிகுந்த சேதமுண்டாயிற்று. ஆயினும் மதுரை நாயக்கருக்கே வெற்றி கிடைத்தது. கண்டியின இரண்டு அமைச்சரும் மற்றும் பலரும் சிறையாக்கப்பட்டனர். தமது கைையிற்பட்ட எதிரிகட்குக் கிருஷ்ணப்பர்வைத்தியமும், உபசாரமும் முழுமனதோடு செய்தார்.

இங்ஙனம் வெற்றியுற்றதால் கிருஷ்ணப்பருக்கு எவ்வித நன்மையும் உண்டாகவே யில்லை. ஏனெனில் கண்டிராஜர் தமது தலைநகரில் இன்னமும் சௌக்கியமாயிருந்தார். நாயக்கர் கண்டி சார்ந்து அம்மன்னரைத் தண்டிக்கக் கருதினர். அதற்குள், சிறைக் குட்பட்டிருந்த அவரது மந்திரிகள் சமாதானம் செய்ய முயன்றும் அவ்வினை அவமாயிற்று. அறுபதினாயிரம் சிங்களரும், எண்ணாயிரம் காப்பியர்களும் சேர்ந்த ஒரு பெருஞ் சேனையோடும் மதுரை நாயக்கரை எதிர்த்தார். இருவருக்கும் பெரும் போருற்றது. அதிலும் மதுரைச் சேனையே மாட்சியுற்றது. ஏனெனில் அரியநாயகர் போன்றவரால் அது நன்கு பழக்கப் பெற்றிருந்தது. முடிவில் நாயக்கர் கையம்பால் கண்டி மன்னர் மாண்டார். அன்று மாலைக்குள் அந்நகர் நாயக்கர் கைப் பட்டது. பின்னுள் அவர் அங்குத் தங்கி, மரித்த மன்னரின் மனைவி மக்கட்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் தமது மைத்துனராகிய விஜய கோபால நாயக்கரைப் பிரதிநிதியாக நியமித்தபின்பு மதுரை நண்ணினர்.

இஃதிங்ஙனமாக, 1565-ல் முகம்மதியருக்கும் ராயருக்கும் நடந்த தலைக்கோட்டை யுத்தத்தால் விஜயநகர ராஜ்யம் அழிவுற்றது. அச்சந்ததியார் சந்தரகிரி வந்து தங்கினர்.

அவரது கீர்த்தி குறைந்தது. ஆயினும் செல்வாக்கு குறைய வில்லை, அவருக்குட்பட்ட குறுநில மன்னரெல்லாம் முன் போலவே திறையிறுத்து வந்தனர். மைசூர், தஞ்சை, மதுரையாகிய மூன்றும் நாயக்க சிற்றரசர்களிட மிருந்தன, அம்மூவரையும் மேற்பார்க்க அரியநாயகர் தலைவராக்கப்பட்டார்.

முற்கூறிய போர் முடிந்த பின்னர் முதலியார் பாண்டியுற்று அங்குச் சமாதானமே குடிகொண்டிருப்பதைக் கண்டு களித்து, தமது பந்துக்கள் பலரையும், நண்பர்களையும், காஞ்சிபுரத்திலிருந்து வருவித்துச் சோழவந்தானில் தங்கச் செய்ததுமன்றி அவர்களுக்காக எல்லாச் சௌகரியங்களையும் செய்வித்தார். இன்னும் சில சுற்றத்தாரை நகரியிலும், திருமங்கலத்திலும், பாட்ட நேரிபோன்ற கிராமங்களிலும் குடியேற்றினார். இஃதிவ்வாறாக.

இனி இந்த நாயக்கர் தேசத்திற்குச் செய்த நன்மைகளைப்பற்றி உரைப்பாம். நாடெங்கும் சமாதானமே குடிகொண்டிருந்ததால் பல சீர் திருத்தங்களைச் செய்ய அவருக்குச் சந்தர்ப்பம் வாய்ந்தது. திருநெல்வேலியைச் சார்ந்த பாளையங்கோட்டைக்குக் கிழக்கில் புதிய ஊர் ஒன்றைக் கட்டி அதற்குக் கிருஷ்ணபுரம் என்ற பெயரையும் கொடுத்தார். பல கோயில்களையும், குளங்களையும் அக்கிரகாரங்களையும் ஏற்படுத்தினார். நெல்வேலி ஜில்லாவின் மேற்குப்பக்கம் இன்னொரு ஊரையும் கட்டினார். அதுவே தற்போது கடையம் கிருஷ்ணபுரம் என்று சொல்லப்படுவது. இத்தகைய எண்ணிறந்த பல தருமங்களைச் செய்ததால் ஜனங்கள் இவரை மிக அருமையாய்க் கொண்டாடினார்கள்.

கிருஷ்ணப்ப நாயக்கர்.

1573 - 1595. [பக்கம் 17]

T. S. P. P. MADURA.

நான்காம் அதிகாரம்.

* கிருஷ்ணப்ப நாயக்கரும் II விசுவநாத நாயக்கரும்.

1573—1595.

குமார கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பிறகு அவரதிரண்டு புத்திரர்களாகிய கிருஷ்ணப்ப நாயக்கரும், இரண்டாவது விசுவநாத நாயக்கரும் ஒத்து ஆட்சிபுரிந்தார். அவர்கள்காலத்திலும் நாடு முற்றிலும் சமாதான முற்றிருந்ததால், தமது முன்னோர்களைப் போலவே அவர்களும் பல தான தர்மங்களைச் செய்தார்கள். திருச்சி முன்னிலும் நன்னிலையில் வைக்கப்பட்டது. இவர்கள் காலத்திலும் அரியநாயகர் உயிரோடிருந்து வேண்டிய உதவி புரிந்தார். சகோதர அரசர்களில் யார் முன் முடிந்தனரென்று தெரியவில்லை. ஆயினும், இவர்களில் பின்னோர் முன்னும், முன்னோர் பின்னுமாகத் தூஞ்சியிருத்தல் வேண்டுமெனத் துணியக் கூடியதாயிருக்கிறது.

---

* இவருக்குப் பெரிய வீரப்பநாயக்கர் என்றும் பெயர்.

ஐந்தாம் அதிகாரம்.

§ இலிங்கைய நாயக்கரும் $ விசுவப்ப நாயக்கரும்

1595—1602.

இவ்விருவரும் கிருஷ்ணப்ப நாயக்கரின் புதல்வர். இவ ராட்சியைக்கண்டு பொருமையும் பேராசையும் கொண்ட இவர்களது நெருங்கிய உறவினராம் கஸ்தூரி இரங்கைய நாயக்கர் அக்கிரமமாய் அரசைக் கைப்பற்றினுர். ஆனுற்சிலர் ஒன்றுசேர்ந்து அவரை அடித்துத்துரத்திவிட்டார்கள். பின் னர் இளமன்னரிருவருமே செங்கோல் செலுத்தினர்.

இவர்கள் காலத்திலேதான் அரியநாயக முதலியார் காலமுடிவடைந்தார். இவர் முடிவால் பாண்டிநாடேயன்றி தென்னிந்திய ஹிந்து ராஜ்பமே சீர்கெட்ட தென்னலாம். இவ ர்க்குப்பிறகு நாட்டில் பொதுவான மேலதிகாரி இல்லாது போகவே, பற்பல சிற்றரசர்கள் தத்தம் மனங்கொண்டவாறு அடங்காப்பிடாரிகளாகி, ஹிந்து ராஜபத்தின் ஒற்றுமையை யழித்து அதை முகம்மதியர் கையிற் சிக்கவைத்தனர். இவர் களில் கனிஷ்டர் முன்னும், ஜேஷ்டர் பின்னுமாக முறையே 1601, 1602-ல் இவ்வுலக வாழ்க்கையை நீத்தனர்.

---

§ குமார கிருஷ்ணப்ப நாயக்கர் என்றும் வழங்கப்படுவர்.

$ III விசுவநாத நாயக்கர் என்றும் வேறு பெயருண்டு.

ஆறும் அதிகாரம்.

முத்து கிருஷ்ணப்ப நாயக்கர்.

1602—1609.

இலிங்கைய நாயக்கரின் புதல்வராம் இவர் ஏழாண்டுகள் நல்லரசாட்சி செய்தார். இவ்வரசர் பட்டத்திற்கு வந்ததும் முன் பாண்டியனால் கவரப்பட்டதாம் சேதுநாட்டை அந்த வம்சத்திலுதித்த ஒருவருக்குக் கொடுத்தார். அச்சேதுபதி மிகவும் நன்றியறிதலுடையவரா யிருந்தமையால் 72 பாளையக்காரருக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் தமது எல்லா முன்னோர்களையும், பின்னோர்களையும் போலவே தெய்வ பக்தியும், குடிகளிடம் நேசமும் உடையவர். இவர் காலத்தில் பல குளங்களையும், நீர்ப்பாய்ச்சலுக்குரிய பல கால்வாய்களையும், ஊர்களையும், கோயில்களையும் கட்ட ஆரம்பித்தார். இவர் நிர்மித்த ஊர்களில் ஒன்று பசுமலையை யடுத்த கிருஷ்ணபுரமாகும். அது பின்னர் பாழாயிற்றுபோலும். அதற்குச் சமீபத்தில் அப்பெயரையுடைய ஒரு சிறு கிராமம் சமீப காலத்தில் தோன்றிற்று. இவர் காலத்திலேயே முதல் முதல் ஒரு சிறு கிறிஸ்தவக் கோயில் மதுரையிற் கிளம்பிற்று. இவருக்கு மூன்று மக்கள் உண்டு. அன்னோர் முறையே முத்துவீரப்ப நாயக்கரும், திருமலை நாயக்கரும், குமாரமுத்து வீரப்ப நாயக்கருமாம். இவர்களில் மூத்தவரே முதலில் தேசாதிபதி ஆயினர்.

ஏழாம் அதிகாரம்.

முத்துவீரப்ப நாயக்கர்.

1609—1623.

இவர் நாளில் விசேஷமான நிகழ்ச்சிகள் இல்லாவிடினும் முகம்மதியர் படையெழுச்சி கிளம்பியது. ஆயினும் அது எளிதில் அடக்கப்பட்டது. பிறகு மைசூர் மன்னர் திண்டுக்கல்லை எதிர்த்தார். ஆனால் பாளையக்காரரும், பிறரும் ஒன்று சேர்ந்து மைசூர்ச் சேனையை வெருட்டிவிட்டார்கள்.

இதுவரை கூறிய நாயக்கர்கள் காலத்தில் இந்த நாட்டிற்கு நன்மையே மேன்மேலு முண்டாயிற்றன்றி தீமை விளைய வில்லை. இனிவரும் ஆட்சிகளில் நன்மையும் தீமையும் கலந்து வருவதைப் பார்க்கலாம்.

எட்டாம் அதிகாரம்.

திருமலை நாயக்கர்.

1623—1659.

திருமலை நாயக்கரின் பெயரை அறியாதவர்கள் தென் இந்தியாவில் எவருமிரார்; அவ்வா றிருப்பவர்கள் மதுரையைப் பார்த்துமிரார்; அதைப் பற்றி கேள்வியுற்று மிரார். ஏனெனில், மதுரையிலும் மற்றும்பெரியஸ்தலங்களிலும் திருமலை நாயக்கர் பல நேர்த்தியான கட்டிடங்களை அமைத்திருக்கிறது பிரசித்தம். மதுரையை ஆண்ட நாயக்கர்களில், திருமலை நாயக்கர் பத்தாவது பட்டத்து அரசர்.

இவருடைய கற்சிலைகள் மதுரைப் புதுமண்டபத்துத் தூண்கள் ஒன்றிலும், மீனாக்ஷியம்மன் கோயிலிலும், திருப்பரங்குன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர் கோயில்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சிலைகளால் திருமலை நாயக்கர் உயரமாயும், பருத்தும், சிறிது தொந்தி பிடித்தும், ராஜ லக்ஷணம் மிகவும் உள்ளவராயும் காணப்படுகிறார்.

திருமலை நாயக்கர் அரசர் ஆனது முதல், பன்னிரண்டு வருஷம்வரை திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக்கொண்டு அங்கு இருந்தார். அதுபோலவே, அவருடைய முன்னோர்களும் திருச்சிராப்பள்ளியில் இருந்தே இந்தப் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தார்கள். தாம் பட்டத்திற்கு வந்த பதின்மூன்றாவதுவருஷம், திருமலைநாயக்கர் ஒருசமயம் மதுரைக்கு வந்துகொண்டிருந்தார். அவ்வாறு வருகையில் அவருக்கு எப்போதும் இருந்த காசரோகம் கஷ்டப்படுத்தினது. ஆனது பற்றித் தமது பிரயாணத்தை நிறுத்தித் திண்டுக்கல்லில் தங்கினார். அங்குத் தங்கியிருந்தபொழுது மதுரைத் தெய்வங்க

ளாகிய மீநாக்ஷி அம்மனும், சோமசுந்தரரும் அவருடைய சொர்ப்பனத்தில் தோன்றி, மதுரையை ராஜதானி யாக்கிக் கொண்டு, அங்கேயே இருந்து அரசாண்டால் அவருடைய வியாதி நீங்கும் என்றும், அதற்காக விபூதிப் பிரசாதத்தை அவர் அணியவேண்டும் என்றும் உத்திரவு கொடுத்துவிட்டு மறைந்தார்கள். உடனே திருமலை நாயக்கர் விழித்துக் கொண்டு நடந்த விஷயங்களைப் பக்கத்திலிருந்த பிராமணர்க ளிடத்துச் சொன்னார். அவர்கள் தெய்வங்களின் இஷ்டம் போல் நடக்கவேண்டும் என்றார்கள். தம் நோய் நீங்கினால் மதுரையில் இருந்து அரசாள்வதோடு லக்ஷம்பொன் செல வழித்து தேவ ஆராதனைக்குரிய கட்டிடங்களை அங்குக் கட்டு விப்பதாயும் நாயக்கர் வாக்குத் தத்தம் செய்தார்.

மறுநாள் காலையில் அரசர் பல் விளக்குகையில் அவரிடத்தில் அந்த நோய் காணப்படாததால் ஆச்சரியமும் ஆநந்தமும் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு மதுரைவந்து சேர்ந்தார். அதுமுதல் மதுரையையே தலைநகராகச் செய்துகொண்டு அங்கேயே இருந்தார். அப்பொழுதுதான் அவர் பல கட்டிடங்களை அங்கு முடிப்பித்தார்.

வியாபாரம், புராண சம்பந்தம், பலஇடங்களுக்கு நடுவிலிருக்கும் நிலைமை முதலியவற்றால் மதுரைக்கு உள்ள பெருமையைக் காட்டிலும் திருமலை நாயக்கரின் கட்டிடங்களால் ஆகிய பெருமை கொஞ்சங்கூடக் குறைந்தது இல்லை என்று தைரியமாய்ச் சொல்லலாம்.

தென்னிந்தியா முழுவதிலும் சிறந்த கட்டிடங்கள் மதுரையில் இந்த நாயக்கரால் அமைந்துள்ளன. தென்னாட்டார் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன்னர் சிற்பசாஸ்திரத்தில்

சிறந்து இருந்தார்கள் என்பதற்குத் திருமலை நாயக்கருடைய கட்டிடங்களே சாக்ஷியாகும். வளைந்த மாடியைக்கொண்ட கட்டிடங்கள் கட்டுவதற்கு முகம்மதியர்களிடம் இருந்து இந்துக்கள் கற்றுக்கொண்டார்கள் என்று பர்கூஸன் துரை சொல்லுகிறார். அதற்கு அவர் சரியான ஆதாரம் கொடுக்கவில்லை. ஆதலால் அவர் அபிப்பிராயத்தை நாம் ஒப்பவில்லை.

மதுரையிலுள்ள திருமலைநாயக்கரின்கட்டிடங்கள், விஜய நகரத்தில் இருந்தவற்றைப் பார்த்தே கட்டப்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஏனெனில் மதுரை நாயக்கர்களெல்லாம் வெகு காலமாய் விஜய நகரத்திற்கு உட்பட்டு இருந்தவர்கள். ஆதலால் ஒவ்வொரு விஷயத்திலும் தங்கள் சக்கரவர்த்தியையே அவர்கள் பின்பற்றினார்கள்: அவர்கள் எவ்வாறு சத்திரம் சாவடி கட்டியும், கிணறு குளங்களைத் தோண்டியும், சாலைகளைப் போட்டும், நாட்டிற்கு நன்மை செய்தார்களோ, அதுபோலவே, மதுரை நாயக்கர்களும் செய்தார்கள். இவ்வாறு சக்கரவர்த்தி தர்மங்கள் செய்வதை மதுரை நாயக்கர்கள் பின்பற்றியதுபோலவே கட்டிடங்கள் கட்டுவதிலும் பின்பற்றினார்கள். அதற்கு ஒரு உதாரணம் மட்டும் சொல்லுவோம்.

விஜய நகரத்தில் 'தமுக்கம்' என்ற பெயரோடு ஒரு கட்டிடம் இருந்ததாக பர்கூஸனும், சுவால் என்பவரும் தமது புஸ்தகங்களில் எழுதியிருக்கிறார்கள். அந்தப் பெயருடனே மதுரையிலும் இப்போது தமுக்கக் கட்டிடம் இருக்கிறது. அதைப்பற்றி செப்புமுன் அதைப் பார்க்கிலும் சிறந்த, இந்த நாயக்கரின் கட்டிடங்களைப்பற்றி அறிவோம்.

மஹால்—திருமலை நாயக்கரின் கட்டிடங்களில் சிறந்தது மஹால்: அதன் உள்ளே போனவர்களுக்கு அதன் பெருமை

விளங்கும். தூரத்துப் பார்வைக்கு அது மிகச் சிறந்ததாய்த் தெரியாது. இது மதுரையின் தென் கிழக்குப் பாகத்தில் இருக்கிறது. நாயக்கர்கள் காலத்தில், மதுரைமாநகர் கிழக்கு நோக்கி விசாலித்து வந்தது என்பதற்கு மஹாலும் தெப்பக்குளமும் சாக்ஷியாம்.

இந்த மஹாலை அடுத்துப் பலகட்டிடங்கள் இருந்தன வென்றும், அவைகள் பின்னு லழிந்தன வென்றும் தெரிகிறது. ஏனெனில், கொஞ்சகாலத்திற்கு முன்னாலே மஹாலைச் சுற்றி வீடுகள் கட்ட அஸ்திவாரம் தோண்டுகையில் அங்குப் பல நில வறைகளும், நில வழிகளும் காணப்பட்டன. இப்போதுள்ள மஹால் பழைய மஹாலின் நான்கில் ஒரு பாகமே இருக்கும் என்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். மற்றவை அழிந்தனவாம். அழிந்தவைகள் எவைகள் என்று நன்றாய்த் தெரியவில்லை. திருமலை நாயக்கரின் பேரனாகிய சொக்கநாத நாயக்கர் மதுரையில் உள்ள கட்டிடங்களை இடித்து அவற்றிலுள்ள சாமான்களால் திருச்சியில் அரமனை கட்டினதாகச் சரித்திரம் கூறுகிறது. ஆதலால் அவரே மஹாலின் மற்றப் பாகங்களை இடித்தனர் போலும்.

மதுரையிலுள்ள திருமலை நாயக்கரின் மஹாலைப் பார்க்காத கண்களைப் புண்களென்றே சொல்லலாம். "நேபில்ஸ் நகரத்தைப் பார்த்துவிட்டுப் பிறகு இறந்துபோ" (See Naples and die) என்று ஐரோப்பியர் சொல்லுவார்கள். அதாவது, 'ஒருமனிதன் சாகுமுன், இடலிதேசத்து அழகிய நகரமாகிய நேபில்ஸைப் பார்க்கவேண்டும்' என்பதாம். நாம் சொல்வது என்னவென்றால், இந்த நாட்டில்பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் திருமலை நாயக்கரின் மஹாலைப் பார்த்தபின்பே சாகவேண்டும் என்பதுதான். ஏனெனில் நேபில்ஸ் நகரத்தைப் பார்

த்தவர்களும் மஹாலேப் பார்த்து அதிக ஆச்சரியப்படுகிறார்க ளென்றால் இதன்பெருமை எப்படிப்பட்டது! இப்படிப்பட்ட கட்டிடம் நமது தேசத்தில் இருந்தும் அதை நாம் பாராமல் இருக்கலாமா?

இம்மஹாலேக் கண்ணாரப் பாராத ஒருவருக்கு எவ்வளவு சொன்னாலும் அதன் பெருமை தெரியாது. அதன் பிரமா ண்டமான தூண்களும், வழுவழுப்பாயும், உயரமாயும், கன மாயும் இருக்கும் சுவர்களும், மேல் மாடத்தின் வில்வளேவும், உறுதியும் இன்னும் அதன் மற்றப் பாகங்களும் எவ்வளவு சிறந்துள்ளன.

மஹாலுக்குள் நுழைந்ததும் அங்குவிசாலமான முற்றம் ஒன்று உண்டு. அம்முற்றத்தின் எல்லாப் பக்கங்களிலும் கட் டிடங்கள் இருக்கின்றன. அம்முற்றத்திற்கு மேற்கே விசால மான பெரிய அலங்கார மண்டபம் இருக்கிறது. அதில் இப் போது இராமநாதபுரம் ஜில்லா கோர்ட்டு நடை பெறுகிறது. அது மிகவும விசித்திரமானது. அக்காலத்தில் அது சபா மண்டபமாய் இருந்திருக்கலாம். இதற்கு வடபால் சிறு வழி யொன்றுண்டு. அதன் வழிச்சென்றால் அங்கும் ஒரு அழ கான மண்டப மிருக்கின்றது. அதில் இப்பொழுது மதுரை ஸப்கோர்ட்டு நடக்கிறது. சபா மண்டபத்திற்குக் கொஞ்ச தூரம் தெற்கேபோய் மேற்கே திரும்பினால் அங்கு நேர்த்தி யான ஒரு கட்டிடம் இருக்கிறது. அதில் மதுரை ஜில்லா கோர்ட்டு இருக்கிறது. இனி மஹாலின் மாடி முதலியவற் றின் பெருமைகளே நம்மால் இச்சிறு புஸ்தகத்தில் எழுதிமுடி யாது.

அரங்கவிலாஸம், சந்திரமேடை, ராஜசிறைச்சாலே, ஆயு தச்சாலே, குளம் ஆகிய பல கட்டிடங்கள் மஹாலின் சில பா

கங்களாம். அவற்றில் இந்தப் பாகத்திற்கு இன்ன பெயரென்றும், அது இப்பொழுது இருக்கிறதா என்றும் நன்கு தெரியவில்லை.

மஹாலின் கட்டிடங்கள் உத்திரங்களின்றியும், சுண்ணும்பாலும், செங்கல்லாலும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இப்போதுள்ள மஹாலின் அறைகள் நமதுராஜாங்கத்தாரால் மரப்பலகை முதலியவற்றால் ஏற்படுத்தப் பட்டனவாம். நாயக்கர்களுக்குப் பின் ஒருவரும் தேடாத இம்மஹாலை சென்னை கவர்னராயிருந்த லார்டு நேபியர் என்பவர்சீர்திருத்தி இப்போதுள்ள நிலைமைக்குக் கொண்டு வந்தார்.

புதுமண்டபம்—இது மதுரையின் மத்தியிலும், மீனாக்ஷியம்மன் கோயிலின் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. திருமலை நாயக்கர் காலத்திற் புதிதாய்க் கட்டப்பட்டதால் புதுமண்டபம் என்றும், வசந்த உற்சவம் நடக்கிறதால் வசந்த மண்டபம் என்றும் இதற்கு நாமங்கள் உண்டு. பர்கூஸன் இதைத் "திருமலை நாயக்கரின் சத்திரம்" என்றார். சத்திரத்துக்கும், மண்டபத்துக்கும்உள்ள வேறுபாடு தெரியாததால், அவர், இதைச் சத்திரம் என்றார் போலும்.

இது நீண்ட சதுர வடிவாய் இருக்கிறது. இதன் நீளம் 105 அடி, அகலம் 33 அடி. மண்டபத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் தண்ணீர் தேங்கும்படி கல்லால் அகழ் கட்டப்பட்டிருக்கிறது. கிழக்கு மேற்காய் இதில் 4 வரிசை தூண்கள் உண்டு. அவற்றில் மத்தியிலுள்ள இருவரிசைத் தூண்கள் சிலவற்றில், விசுவநாத நாயக்கர் முதல் திருமலை நாயக்கர் வரை மதுரையை யாண்ட நாயக்கர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறு சில சிலைகள் மண்டபத்தின் முன்வரிசைத் தூண்களில் மிகுந்த வேலைப்பாடுடன் செ



புது மண்டபம், மதுரை. [பக்கம் 26.]

T. S. P. P. MADURA.

அழகாய்ச் செய்யப்பட் டிருக்கின்றன. புருஷ ஆயுசில் இப்படிப்பட்ட கட்டிடம் முடிக்க முடியுமோவென்றெண்ணக் கூடியதாய் இது அமைந்திருக்கிறது. 22 வருஷங்களில் 20 லக்ஷம் பொன் செலவில் இது முடிக்கப்பட்டதாம். இதில் தற்போது பல வியாபாரக் கடைகள் உள்ளன.

ராயகோபுரமென்பது புதுமண்டபத்துக்குக் கிழக்கிலுள்ள முற்றுப்பெறாத கோபுரம். ராய், என்பதற்குத் தெலுங்கு பாஷையிற் கல் என்றர்த்தம். ஆதலால் ராயகோபுரமென்பதற்குக் கல்லாற் கட்டப்பட்ட கோபுரமென்று அர்த்தமாம். இது முழுதும் கல்லாலே கட்டப்பட்டது. இதைப்போன்ற 64 கோபுரங்களுக்குத் திருமலை நாயக்கர் ஒரே முகூர்த்தத்தில் அஸ்திவாரம் போட்டார் என்றும், அவற்றில் ஒன்றேனும் முடிவுபெறவில்லை என்றும் சரித்திரம் சொல்லுகிறது. ஆனால், இப்போது சிலவே ஆங்காங்குக் காணப்படுகின்றன. ஒருவன் முடியாத காரியத்தில் முயற்சித்தால் அவன் செய்கையை "ராயகோபுரத்திற்கு அடிப்போட்டாற்போல்" இருக்கிறது என்பர். திருமலை நாயக்கரிடம் பண மில்லாமையாலோ அல்லது அவர் இறந்ததினாலோ இக்கோபுரங்கள் முற்றுப்பெறாதிருந்திருக்கவேண்டும். இவைகளே முற்கூறியதற்குக் காரணங்கள். ஆனால் சிலர் இதையறியாமல் வேறு தவறான கதைகள் சொல்லுகிறார்கள்: இக்கோபுரத்தில் வைத்துக் கட்டிய ஒரு தூணில் தேரை ஒன்றிருந்தமையாலும், அது கட்டிடத்திற்கு உபயோகப்படாததாலும், அந்தத் தூணை நீக்கிவிட்டு வேறொன்று வைக்கமுடியாது ஆதலாலும் இது முடிவு பெறவில்லை என்று ஒரு கதை சொல்லுகிறார்கள்.

மதுரை ராயகோபுரம் இவ்வாறு தடைபட்டிருந்தால், ஸ்ரீரங்கத்திலிருக்கும் இதைப்போன்ற கோபுரம் ஏன் முற்றுப்

பெறவில்லை. அதிலுமா தேரை இருந்தது? இன்னும் இந்தமாதிரி பல கதைகள் உண்டு. அவைகள் எல்லாம் சோம்பேறிகளின் கட்டுக்கதைகளே.

முற்கூறியவைகளில் பெருமையிலும் அழகிலும் எள்ளளவும் குறையாத மற்றொன்றும் மதுரையிலுண்டு. அதுவே மதுரைக்குக் கிழக்கே இரண்டுமைல் தூரத்திலுள்ளபெரியதேப்பக்குளம். மாரியம்மன் கோயிலின் பக்கத்திலிருப்பதால் மாரியம்மன் தேப்பக்குளமென்றும், வண்டியூரை யண்டியிருப்பதால் வண்டியூர்த் தேப்பக்குளமென்றும் இதற்கு வேறுபெயர்கள் உண்டு. தென்னிந்தியாவின் குளங்களில் இதுவே மிகப்பெரியதாம். இது 950 அடி நீளமும், அவ்வளவு அகலமுமுள்ள சதுரமாயிருக்கிறது. திருமலை நாயக்கர் மஹால் கட்டும்போது அதற்குவேண்டிய செங்கற்களுக்காக ஒருமடு தோண்டப்பட்டதென்றும், அது மிகப் பெரியதாய் இருந்தபடியால் பிறகு தெப்பக்குளமாய்க் கட்டப்பட்ட தென்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

இக்குளத்தைச் சுற்றிலும் கைப்பிடிச்சுவர்கள் கற்களால் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்தச் சுவர்களைச்சுற்றி உட்பக்கத்தில் இருவர் நடந்துபோகக்கூடிய வழி கருங்கல்லால் குளத்தின் நான்கு பக்கங்களிலும் கட்டப்பட் டிருக்கிறது. குளத்தின் நான்கு பக்கங்களிலும் படித்துறைகள் வேண்டியபடி ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. குளத்தின் நடுவண் தீவுபோன்ற ஒரு மேடை உண்டு அதன் மத்தியில் ஒரு கோயிலும் அதில் ஒரு பெரிய கோபுரமும், மேடையின் நான்கு மூலைகளிலும் நான்கு சிறு கோபுரங்களும் உண்டு. அந்த மேடையில் கோயிலைத் தவிர மற்றப் பாகத்தில், மா, பலா, தென்னை, வாழை முதலியன பயிராக்கப்பட்டு இருக்கின்றன.

இந்தக் குளத்தில், பிரதி தை மாதமும் பூச நக்ஷத்திரத்தன்று மீநாக்ஷி சுந்தரேசுவரருக்குத் திருவிழா நடக்கும். அது இரவில் நடக்கிறதால், குளக்கரைகளிலும் கோபுரங்களிலும் தீபங்களும் மத்தாப்புக்களும் எரியும். அப்பொழுது இக்குளத்தின் வனப்பு வெகு நேர்த்தியாய் இருக்கும்.

இத்திருவிழா திருமலை நாயக்கரின் ஜன்ம நக்ஷத்திரத்தன்று நடக்கின்றதாம்.

தமுக்கம் என்பது வைகைநதியின் வடக்குக்கரையில் இருக்கும் ஒருகட்டிடம். தெலுங்கு பாஷையில் தமுக்கம் என்பதற்குக் "கோடைகாலத்தில் வசிக்குமிடம்" என்று பொருளாம். கர்ண பரம்பரையிற் கேள்விப்பட்டதி லிருந்தும் நெல்ஸன் துரை சொல்வதிலிருந்தும் இது திருமலைநாயக்கரால் கட்டப்பட்டதென்று தெரிகிறது. ஆனல், Ancient Monument Preservation Act இதை மங்கம்மாள் கட்டினதாகத் தெரிவிக்கிறது. அக்காலத்திய அரசர்கள் கோடையில் இதில்இருந்தார்கள். இதையடுத்து புலி, கரடி முதலியவற்றிற்கு லாயம் ஏற்படுத்தப்பட்டிருந்ததாம். இபபோது இதில் மதுரை ஜில்லா கலெக்டர் வசிக்கிறார்.

மதுரை மீநாக்ஷியம்மன் கோயிலின் சிலபாகங்கள் திருமலைநாயக்கரால் கட்டப்பட்டன. வேறுபல நன்கு புதுப்பிக்கப்பட்டன. ஆயினும் அவர் எவற்றைப் புதுப்பித்தார் என்றும், எவற்றைக் கட்டினரென்றும் நன்ருய்த்தெரியவில்லை. மீநாக்ஷி கோயிலின் கோபுரங்கள் நான்கும் இவரால் கட்டப்பட்டன அல்ல என்பதற்கு ஆதாரங்கள் பல இருப்பதால் அவை நாயக்கருக்கு வெகு காலத்துக்கு முன்னரே இருக்கின்றன.

இதுவரை நாம் சொன்னவைகளே திருமலை நாயக்கர் மதுரையில் நிர்மித்த கட்டிடங்களாம். இவற்றைத்தவிர ஸ்ரீரங்

கம், ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர்கோயில், திருப்பரங்குன்றம் முதலிய பல இடங்களில் கணக்கிலடங்காத கட்டிடங்களை இவர் அமைத்திருக்கிறார்.

இதுவரை இந்த நாயக்கரின் கட்டிடங்களைப்பற்றிச்சொன்னோம். இனி அவர்காலத்தில் நடந்த பெரிய யுத்தங்களைப் பற்றிச் சொல்வோம்.

திருமலைநாயக்கர் தம்முடைய முன்னோர்களைப் போல விஜயநகர சக்கரவர்த்திக்கு உட்படாமல் ஆரம்பத்திலிருந்தே நாட்டை ஆண்டார். ஏனெனில், அவர்காலத்தில் சக்கரவர்த்தி முகம்மதியர்களின் இம்சைக்கு உட்பட்டிருந்ததால் அவருடைய செல்வாக்கு குறைந் திருந்தது. ஆதலாலேதான் திருமலைநாயக்கர் சுயேச்சையாய் இருக்க எண்ணினார். நாயக்கர் இப்படிச் செய்ததை விஜயநகரத்தார் அறிந்திருந்தும் தமது சக்திக் குறைவால் அவரை அச்சமயம் எதிர்க்காமல் இருந்தார். ஆகிலும், மதுரை நாயக்கர்களைப்போல அச்சக்கரவர்த்திக்கு உட்பட்ட பல அரசர்களில் மைசூர் அரசராகிய சம்பராஜ உடையார் ராஜபக்தி மேலிட்டவராதலாலும், திருமலைநாயக்கரின் தமையன காலமுதலே இவ்விரண்டு நாடுகளுக்கும் பகைமை ஏற்பட்டிருந்ததாலும் அவர் திருமலைநாயக்கரோடு போர் தொடங்கினர். இந்த நாயக்கர் முதலில் தொடங்கிய சண்டை இதுவே.

முதலில் மைசூர்ச்சேனை ஹரசுரநந்தி ராஜாவின் தலைமையின்கீழ், பல குன்றுகளைக் கடந்து, கடைசியில் நாயக்கநாடாகிய சத்தியமங்கலம்தாலூகாவிலும், அதைச் சுற்றிய பாகத்திலும் தங்கியது; பின்பு மெல்ல மெல்ல திண்டுக்கல் கோட்டையையும் எதிர்த்தது. அதைக் கேட்ட திருமலை நாயக்கர் தமது தேசத்தில் மகாவீரரென்று பெயர்பெற்ற தளவாய் ராமப்பை

யர் என்ற பிராமணர்வசம் ஒரு பெரும் சேனையை அனுப்பி னர். அந்த ராமப்பையர் திண்டுக்கல்லை எதிர்த்த மைசூர்ச் சேனையைத் தோற்கடித்துவிட்டார். விரோதிகள் அச்சமுற்று குதிங்கால் பிடரியில் அடிக்க, ஓரே ஓட்டமாய்த் தமது நாட்டுக்குப் பறந்தனர். ராமப்பையர் அவர்களைப் பின்தொடர்ந்து மைசூரின் தலைநகரத்தை முற்றுகை யிட்டார். அப்போது விரோதிகள் அவரது அஞ்சாமைக்கு மிகவும் அஞ்சினர். இதற்குள் அத் தளவாயிடம் பகைமை கொண்ட சிலர் அவரைப்பற்றி திருமலை நாயக்கரிடம் கோள் மூட்டினர்கள். நாயக்கர், அவர்களுடைய மொழிகளைக் கேட்டுக்கொண்டு தளவாயை உடனே மதுரைக்குத் திரும்பும்படி ஆணையிட்டார். இம்மட்டோடு மைசூர் முதற் சமரம் முடிந்தது.

இனிச் சேதுபதிகள் சம்பந்தமாய் இந்தநாயக்கரின் செய்கைகளைப் பார்ப்போம். இவர் காலத்தில் சேதுபதிகள் அவர்களுக்கு உட்பட்டே இருந்தார்கள். அக்காலத்துச் சேதுபதியாகிய சடையத்தேவர் தமது தத்துப் புத்திரனுடைய மகனுக்குப் பட்டம் கட்டினர். அவர் இறந்ததும், தம்பி என்பவர், தாமே இறந்த சேதுபதியின் பிள்ளையென்று சொல்லிக்கொண்டும், நாடு தன்னைச் சேர வேண்டு மென்றும் திருமலை நாயக்கரிடம் முறையிட்டார். உடனே நாயக்கர் பெரிய சேனையொன்றைத் தம்பிவசம் அனுப்பினர். அப்போது இருந்த தளவாய் சேதுபதி, தம்பியைத் தோற்கடித்து விட்டார். அதைக் கேள்விப்பட்ட திருமலை நாயக்கர் கோபங்கொண்டு. பெரிய சேனையோடு தளவாய் ராமப்பையரை அனுப்பினர். உடனே தளவாய்சேதுபதி, ராமேசுவரத்துக்குப்போய்அங்கே ஒளித்துக்கொண்டார். அச்சமயம் ஏதோகாரணத்தால் ராமப்பையர் திடீரென்று இறந்து நாயக்க நாட்டிற்குப் பெரிய வருத்தத்தை உண்டாக்கினர்.

அவருக்குப் பின்வந்த தளவாய், ராமேசுவரம்போய், சேதுபதியைச் சிறைப்படுத்தி மதுரைக்குக் கொண்டு வந்தார். உடனே தம்பி, சேதுபதி ஆக்கப்பட்டார். ஆனால் அவர் பலமிலலாதவர். ஆதலால் சேதுநாட்டில் கொலையும் களவுமே குடிகொண்டன. இராமேசுவர யாத்திரிகளுக்கு வழியில் மிகுந்த கஷ்டம் உண்டானது. அவர்கள் திருமலை நாயக்கரிடம் தெரியப்படுததினார்கள். நாயக்கர் இதற்கெல்லாம் தாமேகாரணஸ்தர் என்னவறிந்து சிறைப்படுத்தி யிருந்த சேதுபதியை விடுதலைசெய்து, அவரைச் சேதுபதி ஆக்கினார். அன்றுமுதல் சேதுநாடு சமாதானமாய் இருந்தது.

முன்னாலேயே திருமலை நாயக்கருக்கும், சக்கரவர்த்திக்கும் இருந்த சம்பந்தத்தைச் சொன்னோம் அல்லவா? அச்சக்கரவர்த்தி கொஞ்ச காலத்துககு எல்லாம் வலியுற்றுத் தென்னாட்டுச் சிற்றரசர்களைத் தண்டிக்க வெண்ணினார். அவர் முதலில் செஞ்சிக கோட்டையை எதிர்த்தார். திருமலை நாயக்கர் செஞ்சி, தஞ்சாவூர் நாயக்கர்களோடு சதியாலோசனை செய்துகொண்டு, சக்கரவர்த்தியை ஜெயிப்பதற்குப் பெருஞ்சேனையொன்றை சண்டைக்கு அனுப்பினார்.

அச்சண்டையில் சக்கரவர்த்தி ஜெயமடைந்தார். மதுரைச் சேனையானது செஞ்சிச் சேனையோடு சேர முடியாமல் சக்கரவர்த்தி ஜெய்தனர். ஆதலால் திருமலைநாயக்கரின் எண்ணம் பலிக்கவில்லை.

இவ்வாறு அபஜயமுற்ற நாயக்கர் பரிபவமுற்று, தமக்கு உதவி செய்யும்படி கோலகோண்டா சுபேதாரைக் கேட்டார். அந்தச்சுபேதார் அதுவே தமக்குநல்ல தருணமென் றெண்ணி தம்முடைய பழைய விரோதியாகிய சக்கரவர்த்தியின் நாட்

டை வடக்குப் பக்கத்தில் எதிர்த்தார். தம் நாட்டைக் காப்பாற்றுவதற்காக சக்கரவர்த்தி தென்னாட்டிலிருந்து போய்விவிட்டார். அவருக்கும் சுபேதாருக்கும் வெகுகாலம் சண்டை நடந்தது. ஆனால் ஒருவருக்கும் ஜெயம் உண்டாகவில்லை.

முடிவில் முகம்மதியர் செஞ்சிக் கோட்டையைப் பிடித்துக்கொண்டு மதுரையைத் தாக்கினார்கள். தம்முடைய சிநேகிதரே தமக்குச்செய்தமோசத்தால் வருத்தமடைந்த திருமலை நாயக்கர் கோலகொண்டா சுபேதாருக்கு விரோதமாய் பீஜப்பூர் சுபேதாரிடம் உதவிவேண்டினார். பீஜப்பூர் சுபேதார் முதலில் நாயக்கருக்கு உதவிசெய்வதாய்ப் பாசாங்குசெய்து, கடைசியில் தம்சேனையை, முற்கூறிய சுபேதாரின் சேனையோடு சேர்த்துக்கொண்டார். இருவருமாக மதுரையை எதிர்த்தார்கள். நமது முன்னோர்கள் சொன்ன "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" "பிறர்க்கின்னாவித்தி வினைவிளைப்பக் காண்டலில், பித்துமுளவோ பிற" என்ற பழமொழிகள் நாயக்கருக் கேற்றவைகளாயிருந்தன.

இச்சமயத்தில் பெரியசேனையோடு சக்கரவர்த்தி வந்து திருமலைநாயக்கருக்கு உதவிசெய்தார். அவர் எவ்வளவோ உதவிசெய்தாலும், நாயக்கரின் சேனைக்குள்ளேயே குழப்பங்களேற்பட்டதால் அவருக்கு ஜெயம் உண்டாகவில்லை. ஆனாலும் சக்கரவர்த்திவந்து உதவிசெய்யாவிட்டால் மதுரையை நாம் இந்நிலையிற் பார்ப்பதரிது. கடைசியாக நாயக்கர் மிகுதியான பணம்கொடுத்தும், பிரதிவருஷமும் பீஜப்பூர் சுபேதாருக்குக் கப்பங்கட்டுவதாய் ஒப்புக்கொண்டும் முகம்மதியரைச் சமாதானப்படுத்தி அனுப்பினார்.

இதற்குள் சக்கரவர்த்தி மறுபடியும் சேனையைத் திரட்டினார். மைசூர் அரசர் அவருக்கு உதவி செய்தார். அவ்

வாறு உதவிசெய்யும் மைசூர் அரசனைக் கண்டிக்கும்படி திருமலைநாயக்கர் கோலகொண்டா சுபேதாரை ஏவினர். அந்த சுபேதார் மைசூரைச் சூறையாடினபிறகு, மதுரைக்குத் திருமபிவந்து அதை நிர்மூலமாக்க ஆரம்பித்தார். உடனே திருமலைநாயக்கர் அவருக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து நல்லவார்த்தை சொல்லி அனுப்பினர்.

இது நடந்த சிறிதுகாலத்துக்குப் பிறகு, தம்மேல் முகம்மதியரை ஏவியதற்காக மைசூர் மன்னர் பெரிய சேனையோடு திருமலைநாயக்கரை எதிர்த்தார். நாயக்கரால் எக்காரியமும் முடியவில்லை. முடிவில், அவர் தமது மனைவி கையால் சேதுபதிக்கு ஒருகடிதம் எழுதுவித்துத் தமக்கு உதவிசெய்யும்படி கேட்டுக்கொண்டார். சேதுபதி, தமக்கு நாயக்கர்முன்செய்த தீங்கை எண்ணாது, பெரிய சேனையோடுவந்து மைசூர் அரசனைத் தாராபுரம்வரை துரத்தித் துரத்தியடித்தார். அப்படிச் செய்த சேதுபதிக்குத் தமது தந்தப் பல்லக்கையும், திருமலை சேதுபதிஎன்ற பட்டத்தையும், திருச்சுழி திருப்பூவணம், பள்ளிமடம் முதலிய இடங்களையும் நாயக்கர் கொடுத்தார்.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு, திருமலை நாயக்கரின் தம்பியாகிய குமாரமுத்து நாயக்கர் பெரியசேனையோடு மைசூருக்குப்போய், அந்த அரசனுடைய மூக்கை அறுத்துக்கொண்டு மதுரைக்குத் திரும்புமுன் நாயக்கருடைய ஆட்சி முடிந்தது. சாம்போது அவருக்கு வயது எழுபத்தைந்தாம். இவரது அந்தியகாலத்துக்குப் பலர் பல காரணங்கள் கூறுவர். அவையெல்லாம் உண்மையெனக் கொள்ள வழியில்லை.

இந்த நாயக்கர்செய்த சண்டைகளைப்பற்றிச் சிறிது கூறுவோம். தமது சக்கரவர்த்திக்கு வேண்டிய குற்றேவல்செய்யத்தக்க சமயத்தில் அவருக்கு மீறிநடந்ததுமன்றி அவருக்கு

விரோதமாய் முகம்மதியரை அவர்பால் விடுத்ததும், எதிர்வி ளைவு நோக்காச் செய்கைகளே. இதனாலேயே, தான்வெட்டிய குழியில் தானே விழுவது மான இவரே முகம்மதியருக்குட்பட வும் வெகு காலமாயிருந்த ஹிந்துராஜ்யம் முகம்மதியர் கை யிற் சிக்கவும் நேர்ந்தது. திருமலை நாயக்கர் இத்தகைய செய் கைகள் செய்திராவிடில் தென்னிந்திய சரித்திரமே ஒருவாறு மாறு பட்டிருக்கக்கூடும். அஃதவ்வாறாக.

இனி இவரிடத்திருந்த நற்குணங்களும் சிறந்தனவாம். திருமலையின் தெய்வபக்தியும், மதஸ்வாதந்தரியமும், களவாய் களைத் தேர்ந்தெடுக்கும் சாமர்த்தியமும், கடைசியாக அவரா லாகிய மாடமாளிகை கூட கோபுரங்களின் பெருமையும் எம் மால் இங்கெழுத முடியாது. இதனாலேயே இவர் இன்னும் புகழப்படுகிறார்.

இவருக்குப் பிறகு இவரது சுதர் முத்து அளகாத்திரி நாயக்கர் அரசடைந்தார்.

ஒன்பதாம் அதிகாரம்.

முத்து அளகாத்திரி நாயக்கர்.

1659—1662.

நாயக்க வமிச வழக்கப்படி திருமலையின் தம்பியாகிய குமாரமுத்து வீரப்ப நாயக்கரே பட்டத்துக் குரியவர். ஆனால் எக்காரணத்தாலோ திருமலையின் புத்திரர் முத்து அளகாத்திரி நாயக்கர் அரசரானார். குமாரமுத்து வீரப்பர் இராமநாதபு

ரம் ஜில்லாவிலுள்ள சிவகாசி முதலிய சுற்றுப்புற நாட்டிற்குக் காவலர் ஆனார். மகாவீரத் தன்மையோடு மைசூர் யுத்தங்களில் மாட்சியுற்றுவந்த இவருக்கு நாடுகிடையாதது காலகதியே.

முத்து அளகாத்திரி தமது பிதாவின் மதியிலாச் செய்கைக்கு வருந்தி, முகம்மதியரின் தொந்தரையைக் களைய நிச்சயித்தார். அதற்காகத் திருச்சிக் கோட்டையைச் சீர்ப்படுத்தி அதில் யுத்தத்திற்கு வேண்டியவைகளையெல்லாம் கொண்டு நிரப்பினார். அன்றியும், தமதெண்ணத்தை முற்றுவிக்கத் தஞ்சாவூர் மன்னரிடம் உதவிவேண்டினர். ஆனால் அவரோ அவ்வாறுசெய்ய மறுத்ததோடு தாம் முகம்மதியரின் தயவைச் சம்பாதிக்கும் பொருட்டு இடல்கானுக்கு வலிய உதவி புரிவதாய் அவருக்குச் சொல்லி யனுப்பினார். ஆனால், இடல்கான் அதற்கு இடங்கொடுக்கவில்லை. கொஞ்ச காலத்திற்கெல்லாம் தென்னாட்டை வெல்லவெண்ணிய முகம்மதியசேனை திருச்சியை யடைந்தது. ஆனால் அங்குச் செய்யப்பட்டிருக்கும் யுத்தசன்னாகங்களைப் பார்த்துப் பயந்து, அங்கிருந்து புறப்பட்டு வழிநெடுகக் கொள்ளை யடித்துக்கொண்டு முடிவில் தஞ்சையையடைந்து, அதையும், அதையடுத்த சிறந்தவல்லம் கோட்டையையும் கைப்பற்றிக்கொண்டது. தஞ்சை மன்னர் காடே தஞ்சமெனத் துணிந்தார்.

இவ்வாறு தஞ்சை நாட்டைப் பெற்ற துணிவால் மதுரையையும் திருச்சியையும் முகம்மதியர் எதிர்த்தார்கள். முத்துஅளகாத்திரி திரிச்சிக் கோட்டைக்குட் சௌக்கியமாயிருந்தனரேயொழிய விரோதிகளை அடக்கச் சிறிதும் முயலவில்லை. எனினும் விரோதச்சேனை வரவரக் குறைந்ததாலும், வந்தவிடத்தில் வறுமையும் நோயும் வருத்தியதாலும் சிறிது பணம் பெற்றுக்கொண்டு தானே போய்விட்டது.

இதற்குச் சிறிது காலத்துக்குள் இவ்வரசர் தமதெண்ணத்தை நிறைவேற்றாதவராய் மூதாதைகள் சென்றவிடம் சேர்ந்தார்.

பத்தாம் அதிகாரம்.

சொக்கநாத நாயக்கர்.

1662—1682.

இவர் முத்து அளகாத்திரியின் புத்திரர். 16-வது வயதில் பட்டம் பெற்றார். இவரே தமது பிதாமகர் மதுரையிற் கட்டிய அரண்மனையை இடித்து, அதிலிருந்து எடுத்த உத்தரம் தூண்முதலிய பொருள்களைக்கொண்டு, தாம் வசிக்கும்படியாகத் திருச்சியில் அரண்மனை கட்டினர்.

தமது பிதாவைப்போல இவரும் முகம்மதியரை வெல்லக் கருதி, தமது படைத்தலைவர்வசம் ஒரு சேனையை செஞ்சிக்கு அனுப்பினார். சென்றவர் விரோதிகளிடம்பணம்பெற்றுக்கொண்டு கடைசியில் அவர்கள் பக்கமே சேர்ந்து அவர்களைத் தூண்டி திருச்சியை எதிர்க்கச்செய்தார். வந்தவிரோதிகளைத் துரத்த நாயக்கர் ஒரு புதிய சேனையை யனுப்பினார். அது பயன்படவில்லை. அப்பால சொக்கநாதர் தாமாகவே நேரிற்சென்று விரோதிகளை முறியடித்து ஓடும்படி செய்தார்.

ஆயினும் இதனால் நாயக்கருக்கு அதிக நன்மை யுண்டானதாகத் தெரியவில்லை. ஏனென்றால், இதற்கு மறுவருஷமே முகம்மதியர் திரும்பத் திரும்பப் படை எடுத்துவந்து சொக்கநாதரிடம் மிகுந்த பணம்பெற்றுப் போயினர்.

இச்சண்டைகளில் தமக்கு உதவி புரியாததால் தஞ்சை மன்னரையும், சேதுபதியையும் நாயக்கர் வருத்தக் கருதினர். இவர்களிற் சேதுபதியிடம் சிறிது நாட்டை நாயக்கர் பெற்றாலும், அவர் உட்படாது அடிக்கடி தொந்திரவு கொடுத்துவந்தார். அன்றியும் இவர்கால முதலே சேதுபதிகள் சுய அரசாட்சிபுரிய உன்னினர்கள். தஞ்சை மன்னரோடு தொடங்கிய போரில் சொக்கநாதரே வெற்றியுற்றார். அதற்குக் காரணம் முற்கூறியபடி முகம்மதியரைவெல்ல அவர்தம்மோடு சேராமையே யாகும். மிகச் சௌந்தர்ய முள்ளவளும், தம்மால் காதலிக்கப்பட்டவளும் தஞ்சை நாயக்கர் வமிசத்தைச்சேர்ந்தவளுமான ஒரு ராஜகன்னிகையைச் சொக்கநாதர் மணக்க விரும்பினர். ஆனால், பெண்வீட்டாருக்கு அச்சம்மந்தமியற்றப் பிரியமில்லை. சொக்கநாதர் தமது எண்ணத்தைப் போரால் நிறை வேற்றிக்கொள்ள நிச்சயித்தார். இதுவே இப்போருக்கு மற்றொரு காரணமாம்.

இச்சண்டை தொடங்குமுன், தஞ்சைமாதர், கோட்டைக்குள்ளேயே அக்கினிப் பிரவேச மாயினர். அம்மன்னரும், அவரது புதல்வரும் மதுரை மன்னரோடு கடும்போர் புரிந்து உயிர் துறந்தார். இச்சந்தர்ப்பத்தில் மதுரை நாயக்கர் எண்ணம் நிறைவேறுதலோடு தஞ்சை நாயக்கர் வம்சம் அநேகமாய்த் தொலைந்ததென்றே சொல்லலாம்.

தஞ்சையைக்கைப்பற்றிய சொக்கநாதர் தமது நெருங்கிய பந்துவாகிய அளகிரி நாயக்கரை அங்கு காவலராக வேற்படுத்தித் திரும்பினர். இதற்கு மறுவருஷமே அளகிரி, விசுவாசமற்று சுயஆட்சி புரியத துணிந்தனர். ஆயினும் பழைய தஞ்சை நாயக்கரின் நெருங்கிய உறவினர் பீஜப்பூர் அடைந்து முகம்மதியர் உதவியால் திரும்பிவந்து அளகிரியைத் துரத்திவிட்டார்.

ஆனால் முகம்மதியரின் படைத்தலைவர் வெங்கோஜி (ஏகோஜி) என்ற மகாராஷ்டிரத் தலைவர் நாட்டைக் கைக்கொண்டார். அதன் பிறகு சொக்கநாதர் மகாராஷ்டிரரை வெல்லக் கருதியும் முடியாதாயிற்று. இப்போரின் முடிவாகத் தஞ்சையில் நாயக்கருக்குப் பிரதியாக நாட்டை மகாராஷ்டிரர் கைப்பற்றிக் கொண்டனர். இம் மாறுபாட்டால் மதுரை மன்னருக்குக் கேடு விளைந்ததே ஒழிய நன்மை வரவில்லை.

அதற் கப்பால் சிக்க தேவராயர் என்ற மைசூர் அரசர் பெருஞ் சேனையோடு போந்து, கோயம்புத்தூரைச் சூழ்ந்த பாகங்களைச் சூறையாடினார். அச்சமயம் தஞ்சை மஹாராஷ்டிரர் அச்சேனையை எதிர்த்து வெற்றி கொண்டாலும் மறவர் மைசூர் மன்னருக் குதவி புரிந்ததால் ராஜ்யத்தின் தலைநகர் விரோதிகள் வசமே இருந்தது. அதன்பிறகு மஹாராஷ்டிரர் மதுரை மன்னரை எதிர்த்தார்கள். நணபரே தமக்குச்செய்த வஞ்சனையை எண்ணி வருந்திய நாயக்கர் மனமுடைந்துமாண்டார். அவ்வமயம் நாட்டில் பஞ்சமுண்டானதாலும், சரியான காலத்தில் தகுந்த உதவி கிடையாமையாலும் மதுரையிலிருந்த மைசூர்ச் சேனை வலியவே திரும்பிச் சென்றது. பிறகு இவரது புத்திரர் இரங்க கிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கர் ஆண்டுச் சென்று அதனைக் கைப்பற்றிக்கொண்டரசரானார்.

பதினோராம் அதிகாரம்.

இரங்க கிருஷ்ண
முத்துவீரப்ப நாயக்கர்.

1682—1689.

இவர் பதினைந்தாவது வயதி லரசரானார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற முதுமொழியின்படி இவர் சிறு பிராய முதலே ஆழ்ந்த யோசனை யுடையோராயும், சார்ந்தாரைத் தம்வயின் பிரியங் கொள்ளச் செய்வாராயு மிருந்தார். முதலில் அவருக் 'கரசர்'என்ற பெயரிருந்ததேயொழிய, ஆளுதற்குப் பெரிய தேசமில்லை. இருந்த சொற்ப நாட்டிலும் பஞ்சமும், பகைவரின் கொள்ளையுமே மிகுந்திருந்தது. ஆயினும் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பகைஞரைப் புகைக்கத் துணிந்தனர்.

அவரது எண்ணத்துக்குத் தக்கவாறு காலமு மிடங்கொடுத்தது. சேது நாட்டிலும், தஞ்சையிலும் உள்நாட்டுக் கலகங்கள் உண்டாயின. மைசூருக்கும், தஞ்சை மஹாராஷ்டிரருக்கும் அருஞ்சமரம் பெருகிற்று. அக்காலத்து டெல்லியிலிருந்த அவுரங்கசீப் தக்ஷிணத்திலுள்ளவரும், பாண்டியின் பழையபகைஞருமாகிய கோலகொண்டா, பீஜப்பூர் சுபேதார்களோடு போர் தொடங்கினர். இவ்வேதுக்களால்வலியடைந்து, முன்னோர் தோற்ற முழு நாட்டையும் இவர் கைப்பற்றினார். இவராட்சி மிகச் சொற்பகாலமே இருந்ததாயினும் இவரது நல்வினைகள் மிகப்பல. இத்தகையர், நாட்டினரது துரதிர்ஷ்டத்தால் பெரியம்மை உபத்திரவமுற்று திடீரென விறந்தார்.

பன்னிரண்டாம் அதிகாரம்.

மங்கம்மாள்.

1689—1705.

மகா ராணியாகிய மங்கம்மாள் பல விதங்களிற் சிறந்தவர். அவருடைய பெயர் தமிழ் நாட்டில் மிகப் பிரசித்தம். கீர்த்திபெற்ற திருமலை நாயக்கரின் பேரனாகிய சொக்கநாத நாயக்கரின் மனைவியார் அவர். தமது பேரனுக்குத் தக்க பருவம் வரும் வரைக்கும் இந்த நாட்டைக் குறைவறச்செங்கோலோச்சிய நல்லுத்தமியார். இந்த அம்மையாரின் உருவப்படமென்று சொல்லுவதொன்று மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலில், பொற்றாமரைக் குளத்தின் மேற்குப் பக்கத்திலும், ஊஞ்சல் மண்டபத்திற்குக் கிழக்குப் பக்கத்திலும் இருக்கும் கல் மண்டபத்தில் தீட்டப்பட்டிருக்கிறது. இப்போது மதுரை ஜங்ஷனுக்கு எதிரிலுள்ள மங்கம்மாள் சத்திரமும், § மதுரை மத்திய மார்க்கேட்டும், அம்மகா ராணியின் ஞாபகார்த்தமாக சிறிது காலத்துக்குமுன் கட்டப்பட்டன. இப்போது அந்திக்கடைப் பொட்டலுக்கு வடக்கிலிருக்கும், இராமநாதபுரம் கலெக்டர் கச்சேரியும், முன்சொன்ன மார்க்கெட்டும், மதுரைக் காலேஜ் மூன்றாவது பிரிவுப் பள்ளிக்கூடமும், அதற்கு வடக்கிலுள்ள முனிஸிபல் கிளை ஆஸ்பத்திரியும், ராஜாங்கப் பெண் பாடசாலையும் அந்த அம்மையாருடைய அரண்மனையின் பாகங்களாம். இவற்றிற் சில சமீபகாலத்தில் இடித்துக் கட்டப்பட்டன. மதுரையிலுள்ள பழைய கலெக்டர் கச்சேரியும், இவர்களுடைய அரண்மனையென்று சிலர் சொல்லுகிறார்கள்.

---

§ Central Market.

இனி இந்த உத்தமியார் நாட்டை ஆளவந்த காரணத்தைச் சொல்வோம். மங்கம்மாளின் புருஷனாகிய சொக்கநாத நாயக்கர் இறந்த பிறகு, அவருடைய பிள்ளையாகிய இரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் ஏழு வருஷம் அரசாட்சி செய்த பின்னர், பெரிய அம்மையால் திடீரென இறந்தார். அவர் மனைவியாகிய முத்தம்மாள் உடன்கட்டை யேற விரும்பினார். ஆனால் அவருடைய மாமியாராகிய மங்கம்மாளும் குடிகளும் அப்படி செய்யக்கூடாது என்று தடுத்தார்கள். ஆயினும், முத்தம்மாள் கேட்கவில்லை. அச்சமயம் அந்த அம்மாள் பூரண கர்ப்பமாயிருந்ததால் குழந்தையைப் பிரசவிக்கும் வரையிலாவது இருக்கும்படி எல்லாரும் கெஞ்சினார்கள்; முத்தம்மாளும் அந்தப்படியே சம்மதித்தார்.

பிறகு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. உடனே முத்தம்மாள் தமது கோரிக்கையை முடிக்க எல்லாரிடமும் உத்தரவு கேட்டார். ஒருவரும் சம்மதிக்கவில்லை. இந்தக் கொடிய செய்கைக்கு யாரே உடன்படுவர்? இன்றைக்கு நாளைக் கென்றெல்லாரும் நாட்களைக் கழித்துக்கொண்டே வந்தார்கள். ஆகையால் ஒருவருக்கும் தெரியாமல் முத்தம்மாள் பனிநீரைப் பருகினர். உடனே ஜன்னிபிறந்து குழந்தையைப் பெற்ற நான்காம் நாளே செத்தார்.

பிறந்த குழந்தையாகிய விஜயரங்க சோக்கநாதனுக்கு மூன்றும் மாதத்திலேயே பட்டம் சூட்டப்பட்டது. அக் குழந்தையால் எக்காரியமும் முடியாதாதலால் குழந்தைக்குத் தக்க பருவம் வரும்வரை மங்கம்மாள் பதினறு வருஷம் அரசாட்சி செய்தார்.

இந்த அம்மாளின் காலத்தில் நாட்டுக்கு உண்டான நன்மைகள் இவ்வளவவ்வள வல்ல. அவற்றை முழுவதும்

நம்மால் எழுத முடியாது; ஆனாலும், சிலவற்றைமட்டும் இங்குச் சொல்வோம். தமது நாட்டின் உள்ளும், அதற்கு வெளியிலும் யாத்திரிகர்களுக்குச் சாப்பாடுபோடப் பலசத்திரங்களையும் சாவடிகளையும் கட்டினார். இன்னும் மதுரையிலிருந்து நான்கு திசைகளிலும் பிரிந்துபோகும் ரஸ்தாக்களை ஏற்படுத்தி, அவற்றில் மரங்களை வைத்துப் பல சாலைகளை ஏற்படுத்தினார். சாலைகள் நெடுகத் தண்ணீர்ப் பந்தல்கள் வைத்தார். பல குளங்களையும் கிணறுகளையும் வெட்டினார். மற்றும் சில கிராமங்களையும் கோயில்களையும் கட்டினார். இன்றும் சாலை வழியே போகிறவர்கள் "மகாராசி மங்கம்மாள்போட்டசாலை" என்று சொல்லி அப்புண்ணியவதியாரை வாழ்த்திப் புகழுகிறதை நாம் கேள்விப்படுகிறோம்.

இவ்வாறு மங்கம்மாளால் செய்யப்பட்ட கணக்கில்லாத தர்மங்களுக்கு சிலர் சில காரணங்கள் சொல்வார்கள். ஒரு புஸ்தகக்காரர், இத் தருமங்களுக்குக் காரணம் அரசியின் கிறுக்கு என்கிறார். இன்னொருவர், ஒருநாள் இடதுகையால் தாம்பூலம் போட்டுக் கொண்டதாயும், அது சாஸ்திரத்துக்கு விரோதமாதலால் அப்பாவத்தைப் போக்க இவ் அம்மையார், இப்படிப்பட்ட தருமங்களைச் செய்தாரென்றும் எழுதுகிறார். இப்படிப் பைத்தியகாரத் தனமான கதைகள் இன்னும் சில உண்டு.

நமது தேசத்தில் இருந்த எத்தனையோ அரசர்கள் பிறருக்கு உதவிசெய்வதில் தங்கள் உயிரையும் விடத்துணிந்தனர். அதற்கெல்லாங் காரணங்களைக் காணோம். அப்படியிருக்க, நமது மகாராணியார் செய்த சாதாரண தருமங்களுக்குக் காரணமும் சொல்லவேண்டுமா?

இயற்கையாக ஸ்திரீகளுக்கே ஜீவர்களிடம் இரக்கம்இருப்ப துண்மை. மங்கம்மாள் அவர்களில் ஒருவர் அல்லரோ? இன்னும் அவர்கள் பெரிய குடும்பத்திற் பிறந்து பெரிய குடும்பத்தில் வந்து வாழ்க்கைப்பட வில்லையா? அப்படியிருக்க இந்தக் குணம் அவரிடம் இருக்கக்கூடியது சகஜம்தானே. இதை விட்டு, பொழுதுபோகாத சிலர் பல கட்டுக் கதைகளைக் கட்டிவிடுகிறது வழக்கமாயிருக்கிறது.

இந்த மகாராணியார் காலத்திலேயே, கடைசியாக மதுரை நாயக்கநாடு நல்ல நிலைமையில் இருந்தது என்னலாம். அவர்களுக்குப் பிறகு, அந்த ராஜ்யம் அழியும்காலம் அடைந்தது. இந்த அரசியார் மிகுந்த செல்வாக்குடன் இருந்தார் என்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

1691-ஆ மேல்லோ என்ற ரோமன் காத்தலிக் பாதிரியார் சேது நாட்டில் சிறையில் அடைக்கப்பட்டு தூக்கப்படும் சமயத்திலிருந்தார். உடனே மதுரைத் தளவாய், பாதிரியாரை விடுவிக்கும்படி சேதுபதிக்கு ஒரு உத்திரவு அனுப்பினார். உடனே சேதுபதி அவரை விடுவித்துவிட்டார். இன்னொரு சமயம் கிழவன் சேதுபதி, வெங்கிட கிருஷ்ணப்ப நாயக்கரோடு சேர்ந்துகொண்டு திருச்சியைக் கொள்ளை யாடுகையில், அவர் அவ்வாறு செய்யக்கூடாது என்று உத்தரவனுப்பப்பட்டது. உடனே சேதுபதி அவ்வாறே நடந்துகொண்டார். இவற்றால் மங்கம்மாள் காலத்தில் நாயக்க நாட்டிற் கெவ்வளவு செல்வாக்கு இருந்ததென்று விளங்க வில்லையோ?

இன்னொரு முக்கியமான விஷயம் இந்த ராணியார் காலத்தில் மறவநாட்டில் நடந்தது. அக்காலத்தில் கிழவத்தேவர் சேதுபதியாய் இருந்தார். அவர் அதிகக் கிழவராகும் வரை

36-வருஷங்கள் ஆண்டதால் "கிழவன்" என்ற பட்டப்பெயர் அவருக்குண்டு. அக்காலத்தில் அருளானந்தம் பாதிரியார் சேதுபதிக்குச் சொந்தமான திரயத்தேவரை கிறிஸ்துவ மதத்திற் சேர்த்தார். அதனால் அத்தேவர் தமது ஒரு மனைவியைத் தவிர தாம் கலியாணம் செய்துகொண்ட மற்றப்பேரைத் தள்ளிவிட்டார்.

அவர்களில் ஒரு மனைவி சேதுபதிக்கு நெருங்கிய பந்து. அவடனது கதியைச் சேதுபதியிடம் வந்து சொல்ல, அவருக்கு அடக்கமுடியாத சினம் வந்தது. இவ்வாறு நடப்பதற்கு காரணமாயிருந்த பாதிரியாரை கைதியாககவும், கிறிஸ்துவக் கோயில்களை யெல்லாம இடிக்கவும் சேதுபதி உடனே உத்தரவு செய்தார். கொஞ்ச காலத்துக்குப் பிறகு பாதிரியாரைக் கொல்லும்படி உத்தரவு செய்தார். திரயத்தேவர் தமது குருவையும், அவரைச் சேர்ந்தவரையும் காப்பாற்ற எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. முடிவில் பாதிரியார், பார்த்தோர் பரிதபிக்கத் தூக்கப்பட்டார். அக்காலத்தில் இச்சம்பவம் நடந்திராவிட்டால், சேது நாட்டில் எல்லாருமே கிறிஸ்தவர்களாக இப்போது இருப்பார்களென்று ஒருவர் எழுதுகிறார்.

இப்படிப்பட்ட காரியம் நமது தேசத்தில் முன்னாலே நடந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருக்க மகா சாதுக்களாகிய இந்தியர்களைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு செய்தது மிகவும் ஆச்சரியமாயும் வருத்தமாயும் தோன்றுகிறது.

இதற்குச் சிறித் காலத்துக்குப் பிறகு புச்சேட் என்கிற பாதிரியார், தளவாயைக் காண எண்ணி திருச்சிக்குப்போய்

---

* John De Britto.

தளவாய் நரசப்ப ஐயரைச் சந்தித்தார். தளவாய் பாதிரியாரின் வரவை ஏற்றுக்கொண்டு, அவருக்கு பலமரியாதைகளைச் செய்தார். உடனே பாதிரியார், தாம் கொண்டு வந்த அபூர்வமான பொருள்களைத் தளவாய்க்குக் கொடுத்துக் கிறிஸ்தவர்களை ஒருவரும் கஷ்டப்படுத்தாதவாறு உத்தரவு கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். தளவாய் மகா இராணியாரிடம் பாதிரியாரின் சங்கதிகளைச் சொல்லி, அவருக்கு உதவி செய்ய உத்தரவு கேட்டார். மங்கம்மாளும் அதற்கு உடன்பட்டார். முடிவில் தளவாய் பாதிரியாரின் எண்ணத்தை நிறைவேற்றியதோடு, அக்காலத்து வழக்கப்படி அவருக்கு வேண்டிய மரியாதை செய்தார். அவரைப் பல்லக்கில் ஏற்றித் திருச்சிக்கு 12-மைல் தூரத்திலிருந்த அவருடைய வீட்டில் கொண்டுபோய் விடும்படியும் உத்தரவு செய்தார். இதனால் மங்கம்மாள் மதத் துவேஷம் பாராட்டவில்லை என்று விளங்கவில்லையா?

இனி இந்த வாட்சியில் நடந்த சண்டைகளைப்பற்றி அறிவோம். 1698ஆ திருவாங்கூர் ராஜ்யத்தில் நடந்த ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. அந்த அரசர் சொக்கநாத நாயக்கர் காலமுதல் மதுரை நாட்டில் இருந்த குழப்பங்களால் நாயக்கர்களுக்குக் கட்டவேண்டிய கப்பத்தைச் செலுத்தவில்லை. மங்கம்மாள் ஆட்சிபெற்ற பிறகு அச்சிற்றரசனைக் கட்டாயப்படுத்தி இறை வாங்கிவர ஒரு சேனையை அனுப்பினார். திருவாங்கூர் அரசர், முதலில் மதுரைச் சேனைக்குப் பயந்தவர்போல் பாசாங்கு செய்து, அந்தச் சேனையின் உதவியால் தம்மோடு கலகம்செய்த மந்திரிகளை அடக்கினார். அப்புறம் நாயக்கசேனையை வஞ்சகமாய் எதிர்த்து அதை அநேகமாய் முற்றிலும் அழித்து விட்டார்.

திருமலை நாயக்கர்.

T. S. P. P. MADURA.

உயிர்தப்பிய இரண்டொருவர் திரும்பிவந்து மங்கம்மாளிடம் நடந்ததைத் தெரிவித்தார்கள். உடனே இராணியாருக்கு உண்டான கோபத்துக்கு அளவில்லை. சிறிதும் தமது வலிமை யறியாமலும், வஞ்சகமாயும், அவமதித்தும் தீங்கு செய்த அந்த சிற்றரசரைத் தண்டிக்க எண்ணி மங்கம்மாள் தளவாய் நரசப்ப ஐயர் வசம் பெருஞ்சேனையொன்றை அனுப்பினர். தளவாய் அங்குச் சென்று விரோதியைத் தோற்கடித்து அவரிட மிருந்து ஏராளமான பணமும், நகைகளும், துப்பாக்கிகளும் பெற்று திருச்சிக்குத் திரும்பினர்.

1700-ல் தஞ்சை மஹாராஷ்டிரமன்னருக்கும், நாயக்க நாட்டிற்கும் சண்டை உண்டாயிற்று. அப்பொழுதும் முற்கூறிய தளவாயே சேனையோடு சண்டைக்கு அனுப்பப்பட்டார். இரண்டு சேனைகளும் காவிரியின் தென்கரையி லிருந்துகொண்டு சண்டையை ஆரம்பிக்கத் தயாராயிருந்தன. எதிரிகளின் பலம் அதிகமா யிருக்குமென்று தளவாய்க்குத் தெரிந்தது. உடனே அவர் ஒரு யுக்தி கண்டு பிடித்தார். அதாவது, தாம் சேனையோடு காவிரியைக் கடந்துசென்று தஞ்சாவூரைப் பிடிப்பதாகப் பிரஸ்தாபப் படுத்தினர். உடனே விரோதிகள் தங்கள் தலைநகர் ஆகிய தஞ்சாவூரைக் காப்பதற்காக ஆற்றைக் கடந்தார்கள். அப்போது நதியில் வெள்ளம் அதிகமாய் இருந்தது. தளவாய் அதுவே தக்கசமயமென்றெண்ணி கரையிலிருந்தபடியே தஞ்சைச் சேனை முழுதையும் நாசமாக்கி ஜயமடைந்தார். பிறகு தளவாய் தஞ்சாவூர் ராஜ்யத்தின் ஒவ்வொரு பாகத்தையும் அழிக்க வாரம்பித்தார்.

இதைக் கேட்ட தஞ்சை மன்னர் மிகவும் கலக்க மடைந்தார். இவ்விதத் துன்பம் தமது மந்திரியாகிய வாகோஜி பண்டிதரால் உண்டானதென்று சந்தேகித்து அவரைத் தண்டிக்க

நிச்சயித்தார். அதை அறிந்த அந்த மந்திரி நிமிஷம்கூடத் தாமதியாமல் அரசர் முன்வந்து 8 நாட்களுக்குள் சமாதானம் செய்வதாய்ச் சொல்லியதோடு அவ்வாறு செய்யத் தவறினால், தமது தலையைவெட்டி அரசர்க்கு முன் வைப்பதாகச் சபதம் செய்தார். அரசரும் சரி யென்றார். உடனே மந்திரி தமது சிநேகரிடமும் பந்துக்களிடமும் அரசரிடமும், மிகுந்தபணத் தைப்பெற்று அதைக்கொண்டு போய், அதில் ஒருபாகத்தை மங்கம்மாளுக்கும் மற்றொரு பாகத்தை மந்திரிகளுக்கும், மீதி ஒருபாகத்தை தளவாயின் தகப்பனுருக்கும் கொடுத்துச் சொன்னபடி சமாதானம்செய்து திரும்பினார், அரசருக்கும் மந்திரியின்மேல் மிகவும் சந்தோஷ முண்டாயிற்று.

இந்த அரசியாரின் ராஜரீக தந்திரத்துக்கு ஒரு உதாரணம் சொல்லுவோம். ஓர் அரசன் தன்னிலும் வலியவனாக இருந்தால், அவன் தன்னிலும் எளிய அரசனை தொந்திரவு செய்யாமல் மங்கம்மாள் வலிமை யில்லாதவருக்கு உதவிசெய்தார். இந்த மாதிரித் தந்திரம் ஆதிகாலமுதலே ஐரோப்பாவில் பிரசித்தம். இந்த முறையை அனுசரிக்காவிட்டால், வலிய அரசன் ஒருவன் முதலில் எளியவனை ஜெயித்துப் படிப் படியாய் எல்லா நாடுகளையும் கைக்கொள்வான்.

இந்தத் தந்திரத்தை நமது இராணியார் நன்றாய் அறிந்திருந்தார். அக்காலத்து மைசூர் அரசர் காவிரியில் அணைகட்டி அதில்வரும் தண்ணீரைத் தடுத்துவிட்டார். அதனால் திருச்சி, தஞ்சையை அடுத்த நிலங்கள் எல்லாம் தரிசாயிருக்க நேரிட்டன. ஆதலால் மங்கம்மாள் சிறிது காலத்துக்கு முன் விரோதியாயிருந்த தஞ்சை அரசரோடு சேர்ந்துகொண்டு மைசூர் அரசரை எதிர்க்கத் தயாராய் இருந்தார். அச்சண்டை தொடங்குமுன் நதியிற் கட்டப்பட்ட அணை வெள்ளத்தாற் கொண்டு போகப்பட்டது.

மறுவருஷம் தஞ்சாவூர், மதுரைச் சேனைகள் ஒன்று சேர்ந்து சேதுபதியை எதிர்த்துச் சண்டைசெய்தன. ஆனால் சேதுபதியின் சேனை மறவராகிய ஒரே ஜாதியாரால் ஆகி நன்கு பழக்கப்பட்டிருந்ததாலும், மற்ற இரண்டு சேனைகளும் அபிமானமில்லாத பல ஜாதியாரால் ஆகியதாலும் சேதுபதி பலமாய்த் தாக்கி ஜெயமடைந்தார். அச் சண்டையில் தளவாய் நரசப்ப ஐயர் கொல்லப்பட்டார். அவரது சாவால் நாயக்க நாட்டுக்குப் பெருத்த நஷ்ட முண்டாயிற்று என்று நாம் சொல்லவேண்டுமோ?

இந்தத் தளவாயின் புத்திக்கூர்மையையும் தைரியத்தையும், நியாயத்தையும் நாம் என்னென்று புகழ்வது? இவரை விரும்பாத கிறிஸ்தவ பாதிரிகளும் இவர் மாதிரியான மந்திரி வேறு எந்த நாயக்க அரசனுக்கும் இருந்ததில்லையென்று சொல்லியிருப்பதால் இவருடைய பெருமை எவ்வளவென்று பாருங்கள்.

முடிவாக இவ்வுத்தமியின் பிற்கால ஜீவியத்தையும் கற்பு நிலையையும் பற்றிக் கூறி விஷயத்தை முடித்து விடுவோம். 1704ல் தன் பேரனுக்குத் தக்க பருவம் வந்ததும், இராஜாங்கத்தை அவரிடம் ஒப்புவித்துவிட்டு, மங்கம்மாள் திருச்சியினின்று மதுரைக்குவந்து அங்குள்ள தமது சொந்த அரண்மனையில் வசித்தார். ஆனால் இதைப்பற்றி 'மதுரை மான்யூல்' நூலாசிரியராகிய நெல்சன் துரை அவர்கள் வேறு அபிப்பிராயம் கொண்டுள்ளார். அதாவது நரசப்பையனுக்குப் பின் மந்திரியாயிருந்த அச்சூசயாவை அரசியார் காதலித்தார்களாம். நாட்டைத் தன் பேரனுக்குக் கொடுக்க மறுத்தார்களாம். அதற்காக ஜனங்கள் ஒன்றுகூடி அவர்களைக் கைதியாக்கி மதுரைக்குக் கொண்டுவந்து சிறையில் வைத்ததோடு நில்லாமற்

சோறும் போடாமலிருந்தார்களாம். மங்கம்மாளோ பசிக்கு அன்னமில்லாமல் உடல் காய வருந்தி உயிர் துறந்தனராம்.

முதலிற்கூறியபடி அரசி கற்புநிலையில் தவறியவள் என்பதற்குத் துரையவர்கள் சில காரணங்களும் கற்பித்தனர். பொற்றாமரைக் கரை மண்டபத்தில் மங்கம்மாளின் படம் எழுதப் பட்டிருக்கிற விடத்து அவள் மந்திரியின் உருவமும் எழுதப் பட்டிருப்பதும் மந்திரியின் சிலையென்று சொல்லப்படும் ஒரு பிம்பம் அங்கு நிற்பதுவும் ஒரு காரணம். படத்தால் மங்கம்மாள் கைம்பெண்ணுடையின்றி சிறந்த ஆடையாபரணங்கொண்டிருந்தார்கள் எனத் தெரிவது பிறிதொரு முகாந்திரம். தம் கணவனுடன் உடன் கட்டை யேறாதது மற்றொரு ஏதுவாம்.

இனி இதன் உண்மையை ஆராய்வோம். ஜனங்கள் பராபரியாய்ச் சொல்வதைத் தவிர தமது கொள்கைக்கு வேறு ஆதாரங்கள் இல்லையெனத் துரையவர்களே எழுதியிருக்கிறார்கள். நேற்று நடந்ததொரு விஷயத்தையே இன்று பலர் தங்களுக்குத் தோற்றியபடி கைச்சரக்கேற்றித் தம்வாயில்வந்தபடியெல்லாம் வெவ்வேறு விதமாய்ச் சொல்லுகின்றனர். அவ்வாறாக, மங்கம்மாளுக்கு சுமார் 175 வருடங்களுக்குப் பின் உள்ளோர் சொல்வதை நம்புவது சரியா? மேலும் சரித்திர ஆராய்ச்சிக்காரர் தகுந்த ஆதாரங்களுடன் ஒரு விஷயத்தை நிரூபிக்க வேண்டுமேயன்றி ஆதாரமில்லாமல் தங்கள் கைக்கு வந்தபடி எழுதிவைப்பது சரியாமா? முதலாவது மங்கம்மாளும் அவரது மந்திரியுமாகிய இருவர் உருவமும் ஒரே இடத்தில் இருத்தல் முற்கூறிய சந்தேகத்திற் கிடமாகிற தென்றார். ஒருஸ்திரீ தன் புருஷனல்லாத மற்றொரு ஆடவன் கையையும்

ஒரு ஆடவன் தன் மனைவியல்லாத இன்னொரு *பெண்ணின் கையையும் பிடித்துக் குலுக்கிக்கொள்ளும் நாகரீகமுள்ள மேனாட்டாரைச் சேர்ந்த துரையவர்கள் முற்கூறியபடி இருவர் படமும் ஒரே இடத்தில் எழுதப்பட்டிருப்பது கற்பில் வழுவினதற்குக் காரணமென்பது மிக விந்தையினும் விந்தையே! நிற்க.

முதலிற் கூறிய படங்கள் மங்கம்மாள் காலத்திற்றான் எழுதப்பட்டன என்பதற்கும் அவ்வுருவங்கள் அவற்றால் குறிக்கப்படும் ஆட்களைத் தான் தெரிவிக்குமென்பதற்கும் ஆதாரங்கள் எவை? நரசப்பையனின் பின் மந்திரியாயிருந்த அச்சையனை அரசி காதலித்தாள் என்றார். படத்தில் மந்திரியின் பெயர் தளவாய் ராமப்பையன் என்று எழுதப்பட்டிருக்கிறதேயன்றி அச்சையன் என்று காணப்படவில்லை. மேலும் அங்கு எழுதப்பட்டுள்ள படங்களைப் பார்த்தால் அவைகள் பொற்றாமரைக் கரையை அடுத்த சுவர்களிலும், பிராகாரங்களிலும் எழுதப்பட்டிருக்கும் படங்களை முற்றிலும் ஒத்திருக்கின்றனவென்பது தெளிவாய்ப் புலப்படுகின்றது.

இனித் துரையவர்களின் அபிப்பிராயப்படி அப்படங்கள் அவைகளால் குறிக்கப்படும் ஆட்களையே தெரிவிப்பனவாய் வைத்துக் கொள்ளுவோம். அவ்வாறு செய்யினும் அரசியார் கைம்பெண்ணுடை தரியாமல் உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்திருப்பது துரையவர்களின் அபிப்பிராயத்திற்கு அநுகூலமாயில்லை. நம் நாட்டாரின் நடையுடைகளையும் வழக்கங்களையும் ஆராய்ந்தறியாது அவர்களிவ்வாறு எழு

* இத்தன்மைய மேனாட்டாரின் நாகரீகம் சிறந்ததென்றாவது சிறந்தது அன்றென்றாவது எண்ணி இவ்விஷயத்தை இங்கு எழுதவில்லை என்றறிக.

தினார்களென்பதிற் றடையில்லை. ஏனெனில், பிராமணப் பெண்கள்தாம் தமது கைம்பெண்மைக்கு ஏற்ப, சிறந்த ஆடை ஆபரணங்களை நீக்கி இருப்பார்களே யன்றி மற்றவர்கள் பெரும்பாலும் அவ்வாறிரார். அதிலும் நாயக்கக் கைம்பெண்கள் ஸ்ரீசூர்ணமு மிடுவார்கள். தாம்பூலமும் தரிப்பார்கள். ஆனால் விதவை என்பதற்குத் தாலி யில்லாமையே அறிகுறியாம். ஆகலால் சிறந்த ஆடை ஆபரணங்களை மங்கம்மாள் அணிந்திருந்தது சகஜமேயன்றோ? குடிக்கும் கஞ்சிக்குங்கூட வழியற்ற ஏழைகள் வீட்டு விதவைகளே மிக நல்ல ஆடை ஆபரணங்கள் புனையும்பொழுது ஒரு பெரிய ராஜ ஸ்திரீயாகிய மங்கம்மாள் நல்லாடை யணிந்தது வியப்பல்ல.

தம் கணவனுடன் இராணி உடன் கட்டை ஏறாத தன்மையைத்துரையவர்கள் தமது கொள்கைக்கு ஓர் ஆதாரமாக்குகின்றார். உடன்கட்டை ஏறவேண்டுமென்பது கட்டாயமல்ல. முற்காலத்தில் தசரதருடைய மரணத்துக்குப் பிறகு அவருடைய பட்டமஹிஷிகள் உயிருட னிருந்ததாக நாம் இதிகாச பூர்வமாய்க் காண்கின்றோம். அன்றியும் அக்பர் கால முதல் சதி (Suttie) நிறுத்தப்பட்டு வந்ததால் அச்சீர் திருத்தம் மெல்ல மெல்லத் தென்னாட்டிலும் பரவியிருக்கலாம். அல்லது தமது புத்திரர் மிகவும் இளைஞராயிருந்தபடியால் அவருக்காகவும் உயிரோடிருந் திருக்கலாம். இன்றேல், உடன்கட்டை ஏறாதிருந்தால் தம்மைப் பின்பற்றிய பிரஜைகளும் அவ்வாறே தம்மைப்போலச் சுகமடையலாம் எனக்கருதியும் நமது இராணியார் அவ்வாறு ஏறாதிருக்கலாம். இன்னுமிவை போன்ற கணக்கில்லாத காரணங்கள் கூறலாம். விரித்துக்கொண்டே செல்லின் பெருகு மாதலின், துரையவர்களின் அபிப்பிராயத்தை மறுக்க இன்னுமொரு விஷயம்மட்டுங் கூறி இதனை நிறுத்திக் கொள்வோம்.

மங்கம்மாளின் நடத்தைப்பிசகைப்பற்றித் துரையவர்கள் கூறுங்கால் அரசியாருக்குச் சுமார் 56வருஷங்கள் இருக்கும். அஃதெவ்வாறெனின், சொக்கநாத நாயக்கர் பட்டத்திற்கு வந்தது 1662ஆ. மங்கம்மாளிறந்த வருஷம் 1705. இவற்றிற் கிடையிலுள்ள காலம 43வருஷங்கள். சொக்கநாத நாயக்கர் 1682-ம் ஆ இறந்ததும் அவருடைய குமாரர் இரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் உடனே பட்டத்திற்கு வந்ததாய்ச் சொல்லப்படுவதால் அக்காலத்தில் அவருக்குக் குறைந்தது 16-வயது இருக்கவேண்டும். ஏனெனில், அவர் பட்டத்திற்கு வந்ததும் போர்க்குப் புறப்பட்டதாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது இவ்வரலாற்றை துரையவர்களும் தமது நூலிற் கூறினர். இதனால் அவ்வரசர் பிறந்த வருஷம் 1667 எனத்தெரிகிறது. நாயக்க ஸ்திரீகள் பருவமடைந்த பின்னரே மணமுடித்தல் இயல்பு. 1667-க்கு இரண்டுவருடங்கட்கு முன்னர் மங்கம்மாளுக்குக் கல்யாணம் நடந்ததாய் வைத்துக் கொண்டால், அப்பொழுதவர்களுக்குக் குறைந்த பக்ஷம் 16 பருவ மிருக்கலாம். எனவே அரசியின் மரண காலத்தில குறைந்தது அவர்களுக்கு (43+13) 56 வயதிற்கு மேலசமே இல்லை. சாதாரணமாய் ஸ்திரீகளுக்கு 40 அல்லது 45 வயதளவு மட்டும் இவ்வுலக இன்பங்களிற் பற்றுதலிருக்குமேயன்றி 50 வருஷங்களுக்குமேல் அஃதிருக்குமென்றுசொல்வது அம்மம்ம! நகைப்பிற் கிடமாகிறது.

தமது பிரஜைகளுக்கு மகோபகாரியாயிருந்து நாட்டில் நன்மை மிகும்படி அநேக சிறந்த சீர்திருத்தங்களைச் செய்த நமது இராணியாரின்தன்மை எவ்வளவு மெச்சிப் பாராட்டத் தக்கது! அவர்களது மனவலிபும், ராஜாங்கதந்திரமும் புத்திக் கூர்மையும் எத்துணை சிறந்தவை. பேர்பெற்ற திருமலை நாயக்கரும் பெரும்பாலும் தமக்கு வேண்டிய கட்டிடங்களை முடித்

துக் கொண்டனரேயன்றி இவ்வரசியாரைப் போன்று அதிக நன்மைகளைத் தேசத்தின் பொருட்டுச் செய்தன ரில்லையே. இவ்வாறாய காரணங்களால் இவர்களே இந்த நாயக்கராஜ வம்சத்தில் சிறந்தவர்களென்று சொல்லத் தடையுண்டோ? இம் மகோத்தமியைப்போன்ற கற்பிற் சிறந்த பெண்ணரசிகளை நாம் எப்போதும் வாழ்த்துவோமாக.

பதின்மூன்றும் அதிகாரம்.

விஜயரங்க சொக்கநாத நாயக்கர்.

1705—1731.

இவர் நன்கு ஆளக்கூடிய சௌகரியங்களிருப்பினும் அவ்வாறு செய்யாது பக்திமேலிட்டவராய் பாண்டித்தலங்கள் தோறும் யாத்திரைபுரிந்து ஆங்காங்கு மிதமிஞ்சிய தானதர்மங்கள் ஆற்றினர். பிராமணருக்குச் சொர்னதான முதலிய பல்வகைய தானங்களையும் புரிந்தனர். பலகோயில்கட்கு மிகுந்த செல்வத்தையும் பூஸ்திதியையும் ஏற்படுத்திவைத்தார். இவ்வாறு யாத்திரை செய்துகொண்டே இருந்தமையால் மதுரையில் உள்நாட்டுக்கலகங்கள் உண்டாயின. ஆயினும் அவை எளிதில் அடக்கப்பெற்றன.

சேதுநாடு சம்பந்தமாய் இவர்காலத்து ஒரு முக்கியமான மாறுபாடுண்டாயிற்று. 1709ஆ கிழவன் சேதுபதி தஞ்சை நாயக்கரைவென்று சுயாதீனமடைந்தார். அச்சேதுபதி 1729-ல் இறக்கவே இவரது நாட்டிற்குரியவர் யாவர் என்பதைக்குறித்து பெருங்கலகங்கள் உண்டாயின. இறுதியில்

சேதுநாடு ஐந்து பகுப்புகளாகப் பிரிக்கப்பெற்றது: அதன் மூன்று பகுதிகளை கட்டயத்தேவர் பெற்றார். ஏனையவிரண்டினைச் சசிவர்ணத்தேவர் கைக்கொண்டார். இச்சசிவர்ணத்தேவருடையநாடே சிவகங்கை ஜமீன். எனவே, இந்த ஆட்சியில் இம்மாறுதல் உண்டாயிற்றெனவறிக.

தெய்வபக்தியும், பிராமணவிசுவாசமுமுள்ள இந்தநாயக்கர் 1731ஆ இறுதியடைந்தார். இவருக்குச் சுதரின்மையால் நாடு அவரது மனைவி மீனாக்ஷிஅம்மாள் கைப்பட்டது.

பதினொன்காம் அதிகாரம்.

மீநாட்சி யம்மாள்.

1731—1736.

முற்கூறிய மன்னரின்மனைவி மீநாக்ஷியம்மாள் தமக்குப்பின் ஆளுதற்கு ஒரு ஆண்சந்ததி வேண்டுமென பங்காரு திருமலை நாயக்கரது புத்திரரான விஜயகுமார முத்துத்திருமலை என்றநான்குவயதுள்ள குழவியைச் சுவீகரித்து, அவருக்குப்பிரதியாய்த் தாமே ஆட்சிபுரிந்தார். சிறிதுகாலஞ் சென்ற, பின்னர் பங்காருதிருமலை தாமே பட்டத்திற் குரியரெனப் புகன்றார். கடைசியில் இருவரும் கர்னாடக நவாபிடம் மத்தியஸ்தம் வேண்டினர். அவர் தமது தளகர்த்தர் சந்தாசாகிபையும் தமது குமாரரையும் நியாயத்தீர்ப்புச் செய்யச்சொன்னார். முடிவில் பங்காருவே நாட்டையாளுமாறு திட்டஞ்செய்யப்பட்டது.

இவ்வாறே அரசுசென்று கொண்டிருக்கையில் மீநாட்சி திருச்சிக்கோட்டையி லிருந்தனர். சந்தாசாஹிப் அவர்வயி

ற் கையுற்றபெற்று, மதுரைசென்று பங்காருவைத் துரத்திவி ட்டுத் திருச்சிக்குச்சென்றார். மீநாட்சியைச் சிறைப்படுத்தி னதும் தேசத்தைத் தாமே கைக்கொண்டார். சந்தாசாஹிப் தமது வெற்றிக்கறிகுறியாகத் திண்டுக்கல் மலைமீது இயற்றிய கட்டிடத்தில் இவ்விஷயத்தை வரைந்துளராம். சிறையுற்ற மீநாக்ஷி தமது நிலைமையை எண்ணித் துக்கித்து, தற்கொலை புரிந்துகொண்டிறந்தார். இதுமுதல் பாண்டிநாயக்கவமிசம் முடிவுபெற்றதெனச் சொல்லலாம்.

¶ "தற்காலத்தில் இராமநாதபுரத்தைச்சேர்ந்த வீரசோழன், சிவகங்கையைச்சேர்ந்த வெள்ளிக்குறிச்சி, போடிநாயக்கனூரைச்சேர்ந்த செட்டிக்குறிச்சி, கண்டப்பநாயக்கனூரைச் சேர்ந்த தேக்கன்பட்டி என்ற நான்குகிராமங்களில் மாத்திரம் நாயக்கமாருடைய கிளையார் குடியிருக்கிறார்கள்"

பதினைந்தாம் அதிகாரம்.

அரசியல்.

இவ்வதிகாரத்தில் நாயக்கர்காலத் தரசியலைச் சிறிது கூறுவாம்.

உத்தியோகஸ்தர்கள்—ஆதிகாலம் முதலே இந்திய அரசர்களுக்குச் சில உத்தியோகஸ்தர்களிருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலாகாவிற்குத் தலைவராயிருந்தார்கள். அவர்களின் முதல்வன் மந்திரி. இக்காலத்தில் மந்திரிகளுக்கு எவ்வளவு செல்வாக்கு உண்டோ அதனிலும்

¶ மதுரைச் சீமை விருத்தாந்தம்.

அக்காலத்திய இந்திய மந்திரிகளுக்கு அதிகமாயிருந்ததாகத் தெரிகிறது. ஒருதேசத்தோடு சண்டையாவது சமாதானமாவது அரசன்செய்ய எண்ணினால் அதற்கு மந்திரியின் சம்மதம் அவசியம்வேண்டும். ஏதேனும் ஒரு புதியசட்டம் ஏற்படுத்துவதானாலும்,பழைய சட்டங்களைப் புதுப்பிப்பதானாலும் மந்திரி சம்மதித்தால்தான் அரசன் செய்யலாம். சுருக்கிச் சொன்னால், அரசன் செய்யும் அற்பவிஷயமும் மந்திரியின் சம்மதத்தால் தான் நடக்கவேண்டும். அம்மந்திரி வரும்பொருள் உரைக்கக்கூடிய புத்திக்கூர்மையுடையவனாய் இருப்பான். மந்திரிக் கடுத்த உத்தியோகஸ்தன் தந்திரி: அதாவது சேனைத்தலைவன். அவன் தேசச்சேனைகளைச் சரியாய்ப் பழக்குவான்; ராஜத்துரோகிகளையும், ராஜவிரோதிகளையும் கண்டு பிடித்துத் தண்டனைக்கு உள்ளாக்குவான். அவனுக்கு அடுத்த உத்தியோகஸ்தன் பிரதானி: அவன் ராஜ்யத்தின் பணசம்பந்தமான விஷயங்களை மேற்பார்ப்பான். ராயசன் அரசனது அந்தரங்க உத்திரவுகளையும் காரியக் குறிப்புகளையும் எழுதி வைப்பவன். இவனே அரசனுடைய அந்தரங்கக் காரியதரிசி. கணக்கன், தேசத்தின் காசுறையின் (கஜானாவின்) வரவு செலவுகளைச் சரிபார்ப்பவன். இவன் கணக்கில் மகா நிபுணனாயிருப்பான். ஸ்தானீகன் அல்லது தூதன் மாறுவேஷத்தோடு வெளித்தேசங்களுக்குப்போய் அங்குள்ள வர்த்தமானங்களை அப்போதைக்கப்போது தன் அரசனுக்குத் தெரிவிப்பவன். சிலவேளைகளில் தன் அரசன் உத்திரவின்படி வேறொரு அரசனிடம் தூதுபோவான். ஆகலால் இவன் சமயத்திற்கு ஏற்ற ஆலோசனையோடுவெகுசாதுரியமாய்ப் பேசக்கூடியவனாயிருப்பான்.

நாயக்கர்கள் காலத்தில் இந்தமுறை, கொஞ்சம் மாறுபட்டிருந்தது: மந்திரியே, தந்திரியாயுமிருந்தான். அவன்பட்

டந்தான் தளவாய். பிராமணர்களே இந்த உத்தியோகத்தை நாயக்கர்கள் காலத்தில் அதிகமாய்ப் பார்த்துவந்தார்கள்.

தளவாய் மதுரைக்கு வெளியே போயிருக்கையில் அதைக்காப்பதற்கு ஒரு சேனைத்தலைவன் வேண்டியிருந்தது. அத்தலைவன் பெயர்தான் தளகர்த்தன். இவனே பிறகு தேசத்தின் போலீஸ் இலாகாவை மேற்பார்த்தான். இவனைப்போன்ற தளகர்த்தர்கள் திருச்சி, திருநெல்வேலி முதலிய பெரிய நகரங்களில் நியமிக்கப்பட்டார்கள்.

அக்காலத்தில் நாட்டில் பெருஞ்சேனைக ளிருக்கவில்லை. சில கிராமங்கள் ஒரு தலைவனுக்குக் கொடுக்கப்படும். அவற்றின் வரும்படியை அவன் அனுபவிப்பான். அவன் பல ஆட்களைத் தனக்கு உட்படுத்தி வைத்திருப்பான். அரசன் யாரோடாவது சண்டைசெய்ய விரும்பினால் நாட்டிலுள்ள எல்லாத் தலைவர்களும் தங்களுடைய சேனைகளோடு குறித்த இடத்தில் ஒன்று சேருவார்கள். இந்தத் தலைவர்கள் பாளையக்காரர்போலும்.

இதனால் நமது ராஜாங்கத்தார் ஏராளமானபொருட்செலவுசெய்து தேசப்பாதுகாப்புக்காக இப்போது வைத்திருக்கும் சேனைகள் அக்காலத்து இல்லை. பாளையக்காரருக்கு மானியங்கள் விட்டிருந்தது போலவே வேறுஒவ்வொரு வேலைக்கும் அவ்வித மானியங்கள் உண்டு. அந்த மானியங்கள் அனுபவிப்பவர்கள் தமது வேலைகளைச் சரிவர நடத்தி வந்தார்கள். அப்படிப்பட்ட மானியங்களிற் சில, இப்பொழுதும் நமது ஆங்கில ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டிருக்கின்றன.

நியாயம்—கிராமாதிகாரிகள், சிறு வழக்குகளைத் தாமே தீர்த்து வந்தார்கள். சில கிராமங்களில் கிராமாதிகாரி சேர்ந்த

பஞ்சாயத்தார் விவகாரங்களுக்கு நியாயம் கொடுத்தார்கள். அவர்களுக்கு அடங்காத வழக்குகளை 'கவர்னர்'கள் தீர்த்தார்கள். வழக்குத் தீர்ப்பதற்காக இவர்களில் எவருக்கும் பணம் கொடுக்கவேண்டியது இல்லை. எனவே, இந்த நியாயங்களெல்லாம் ஒழுங்காய் இருந்தன என்று சொல்ல முடியாது. சிலர் லஞ்சம் வாங்கிக்கொண்டு அநியாயத் தீர்ப்பும் சொல்லியிருப்பார்கள்.

பெரிய ஸிவில், கிரிமினல்வியவகாரங்களையும், பாளையங்களின் வழக்குகளையும், மதச்சண்டைகளையும் அரசரே நேரிற் பார்த்தார்கள். இக்கால நீதி ஸ்தலங்களில் நியாயாதிபதிக்கு உதவிசெய்கிற 'அஸெஸர்' 'ஜூரி' என்பவரைப் போல, அக்காலத்தில் அதைப் பிராமணர்கள் பார்த்து வந்தார்கள். அது எல்லார்க்கும் கொடுக்கப்படமாட்டாது. நன்றாய்ப் படித்தவர்களும், நீண்ட அநுபவமுள்ளவர்களுமே இந்த உத்தியோகம் பார்க்கத் தகுந்தவர்கள். அக்காலத்துத் தேச ஆசாரப்படியும் சாஸ்திரப்படியும், ஜாதி முறைப்படியும் நியாயம் அரசனாற் கொடுக்கப்படும்.

நிலவரி—வரி வசூல், இப்போது போலவே அநேகமாய் நாயக்கர்கள் காலத்தில் இருந்தது என்றுசொல்லலாம். கிராம மணியகாரன் வரிவசூல்செய்து அந்தந்த மாகாணத் தலைவனிடம் ஒப்புவிப்பான். அவன் அதை மதுரைக் கஜானாவிற் கொண்டு சேர்ப்பான். மதுரையைப்போன்ற பெரிய நகரங்களிலும், அவற்றைச் சுற்றிய பாகங்களிலும் வரிவசூல் செய்பவனுக்குச் சீமை மணியகாரன் என்று பெயர். நில விளைச்சலைச் சில பாகங்களாகப் பிரித்து ஒரு பாகத்தை அரசன் கொள்வான். அந்தப் பாகம் கார்பாகத்திலிருந்து அரைப்பாகம்வரை வித்தியாசப்படும். ஆனால் நல்ல அரசர்கள் ஆறில்

ஒரு பாகம் தான் பெறவேண்டும். விளைச்சல் இல்லாத காலங் களில் நிலவரி இல்லை. இப்போது ஆங்கில ராஜ்யத்தில் நாம் கொடுக்கும் நிலவரிஆறில்ஒருபாகத்துக்கும்மிகக்குறைந்ததே.

நிலவரியைத்தவிரக் கடல்படு திரவியங்களாலும் அரசுக்கு வருமானம் உண்டு.

கல்வி—இவ்வரசர் நாயக்கர் ஆதலால் இவர் தாய்ப் பாஷை தேனினும் இனிய தெலுங்கே. ஆயினும் இவர் தமிழ் நாட்டிற் பிறந்து அங்கேயே வளர்ந்ததால் தமிழ்ப்பாஷையைப் படிக்கும்பாக்கியமும் இவருக்குக்கிடைத்தது: இந்த விஷயம் சரித்திரத்தாலும் வெளியாகிறது. அக்காலத்தில் பெரும் தமிழ்ப் புலவர்களாயிருந்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அவர்களும், குமரகுருபர ஸ்வாமிகளும் திருமலைநாயக்கருடைய சமஸ்தான வித்வான்களா யிருந்தா ரென்று தெரிகிறது. ஆதலால் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் இவ்வரசர் ஆதரித்தார் என்று விளங்குகிறது.

இனி நாயக்கர்கள் காலத்தில் கல்வி எவ்வாறு நடைபெற்றதென்று பார்ப்போம். பிராமணர்கள்மட்டும் மற்ற வகுப்பாரைப் பார்க்கிலும் அதிகமாய்க் கல்வி கற்றூர்களாம். கி. பி. 1610-ல் நோபிலிப்ரதிரியார்தம்நாட்டிற்குஎழுதியகடிதத்தில், அவ்வருஷம் மதுரை சர்வ கலாசாலையில்10,000பிராமணர்கள் கல்விகற்று வந்ததாயும், அக்கல்வியால் உண்டாகும் செலவில் பெரும்பாகத்தைச் சக்கரவர்த்தியும், சிறுபாகத்தை மதுரை நாயக்கர்களும் கொடுத்து வந்ததாயும் தெரிவித் திருக்கிறூர். இந்தக் கல்விச் சாலையைத் தவிர மற்ற எதுவும் ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப்படவில்லை. ஆனுல் சிலகிராமங்களில் சிறு பள்ளிக்கூடங்கள் உண்டு. அவைகள் அந்தந்தக் கிராமவாசி

கள் உதவியால் நடைபெற்றன. இப்பொழுதும் அப்படிப் பட்ட பள்ளிக்கூடங்கள் சில கிராமாந்திரங்களில் உண்டு.

மதம்—மதுரை நாயக்கரெல்லாரும் அநேகமாய் மதஸ்வாதந்தரமுள்ளோர். அவர்கள் பிறப்பால் வைஷ்ணவராயினும் சிவன் கோயில்களையும், திருப்பணி மண்டபங்களையும் கட்டுவித்து அவற்றுக்கு மானியங்கள் விடுத்தார்கள். கிறிஸ்தவர்களுக்கு வேண்டிய நன்மைகளையும் மனதாரச் செய்தார் ஏனெனில், இந்து மதத்தைச் சேராத புறசமயத்தாரை அவர் வெறுக்கவேயில்லை. இவர்கள் காலத்தில் ரோமன் காதலிக் பாதிரிகள் பல இந்துக்களை கிறிஸ்தவர்களாக்கினார்கள். மதுரையில் மறியாள் கோயிலும் கட்டினார்கள்.

இதனால், திருமலை நாயக்கர் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்தாரோ என்று சிலர் சந்தேகிக்கிறார்கள். அவ்வாறு சந்தேகப்படுவதற்குக் காரணமேயில்லை. பின்னே கிறிஸ்தவர்கள் தங்கள் மார்க்கத்தை எங்கும் பரவச் செய்வதற்கு இவர் இடம் கொடுத்திருப்பாரா என்றால், இந்துக்கள் சிலமதத்தார்களைப்போல மற்ற மதங்களைத் தூஷிக்கமாட்டார்; எம்மதமும் அம்மதத்தின் கிளையாக நினைப்பார்கள்: ஆதலால் நாயக்கர் கிறிஸ்தவர்களை வெறுக்கவில்லை. இவர் கிறிஸ்தவராயிருந்தால் அந்த மார்க்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி ரோமாபுரிக்கு அடிக்கடிகடிதம் எழுதிவந்த பாதிரிமார்கள் இந்த விஷயத்தைக்குறித்து எழுதாமலாயிருப்பார்கள்? அப்படிக்கடிதம் எழுதியதாய்த் தெரியாததால் இந்தநாயக்கர் இந்துவே. இந்த விஷயத்தை, இந்துகோயில் திருவிழாக்களுக்குப் பல மண்டபங்களும்கட்டி நிலமானியங்களும் விட்ட தன்மை நன்கு தெரிவிக்கிறது. முதலில் இந்துவாயிருந்து பிறகு கிறிஸ்தவராயிருக்கக் கூடாதோ என்றால், அவ்வாறு இருந்தால் அந்த

விஷயத்தைப்பூர்வீக சரித்திரக்காரர்வெளியிட்டிருப்பார்கள். அப்படிப்பட்ட சரித்திரம் இல்லை. இதற்குமுன் அவரை இந்து என்றே கிறிஸ்தவர்களும் எழுதியிருக்கிறார்கள்.

நாயக்கர் காலத்தில் கோயில்களெல்லாம் ராஜாங்கப் பணத்தினின்று ஆதரிக்கப் பெற்றன. அக்கோயில்களைச் சார்ந்த பிராமணரும் வேறுபக்தர்களும் ஏனைய புரோகிதரும் பூதானம் கொடுக்கப்பெற்றனர். மதுரையையடுத்த விளாச்சேரி இத்தகைய கிராமமே.

இவர்கள் சிற்பத்தில் மிகவும் பிரியமுடையவராயிருந்தாராதலின் நாடெங்கும் அரண்மனைகளையும், கோபுரங்களையும் புதிதுபுதிதாய்ச்செய்வித்தார்கள். அவைகளை முடித்தற்பொருட்டு பல சிற்பிகளும் சித்திரக்காரர்களும் இன்னும் வேண்டிய தொழிலாளிகளும் மதுரைக்குவந்து குடியேறினார்கள். ரோமரும்கூட முற்கூறியவாறு வந்தனர் என்று நெல்சன்துரைஎழுதியிருக்கிறார். இவர்கள் காலத்திய கட்டிடங்களைப்பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம். ஆதலின் அவற்றைக் குறித்து இங்கு எழுதுவது அநாவசியம்.

இம்மன்னராலேயே தெலுங்கரிற் பலசாதியாரும் சௌராஷ்டிரரும் மதுரை நாட்டிற்கு வந்தனர். இவர்களில், தெலுங்கப்பிராமணர் சிலர்நாயக்கர்களுக்கு மந்திரிகளாகவும், வேறு சிலர் தண்டநாதராயும் வந்தார்கள். பிராமணரல்லாத தெலுங்கு ஜனங்களிற் சிலர் போர்வீரராயும்,வேறுசிலர் அவர்கட்கு வேண்டிய சௌகரியங்களைச்செய்துதரவும் வந்தனர்போலும். இவ்வரசர்க்கு வேண்டிய பட்டு பீதாம்பரங்கள் நெய்து கொடுக்கவே சௌராஷ்டிரர் அக்காலத்தில் இந்நாட்டிற் குடியேறினர். அவர்களது கைத்தொழிலும் மிகச் சிறந்ததாய்க் கொண்டாடப்பட்டது.

நாயக்கர்களுடைய ஆட்சி நாட்டிற்கு நன்மை பயந்தில தென்றொரு § நூலிற் கண்டுளது. அதிற் கூறியாங்கு இரண்டொருவர் நாட்டைக் கவனியாமலும் கேவலம் உலக இன்பப் பிரியர்களாயு மிருந்திருக்கலாம். அதனால் எல்லாரும் அத்தகையர் என்று கூறுவது சரியாகாது. அதிற் கூறியவாறு அக்காலத்திய காத்தோலிக் பாதிரிகள் கூறியிருப்பினும் அது யாதாமொருவரைக் குறிக்குமேயன்றி நாயக்கரது ஆட்சி முழுதையும் சுட்டுவதாகச் சொல்ல இடமில்லை. இரண்டொருவரது குணத்தால் அந்த வமிசத்தையே பழிப்பது விழுமியதன்று.

இந்தக் குலத்தின் முடிவுக்குப் பிறகு சுமார் அறுபத்தைந்து வருஷகாலம் பலர்கைப்பட்டு தேசமடைந்தகிலேசம் இவ்வளவவ்வளவன்று. அக்காலத்தில் அதன் நிலையைச் சுருக்கி வரைந்தால் நாயக்கர் காலத்தெவ்வளவு நலமுற்றிருந்ததோ அவ்வளவு கிலமுற்றதென்னலாம். முடிவில் 1801-ஆம் மங்குதலில்லாத ஆங்கிலஆட்சியிற்சேர்ந்தது. இளஞ்சூரியன்முன் மையிருட்டுவருதல் நிகரவும், *'புயல்முன் அமைதியுறுவது' புரையவும் ஆங்கில வாட்சியின் முன், 65 ஆண்டுகள் இது அவநிலை அடைந்தது போலும். இங்கிலாந்தின் குடைக்கீழ் வந்தபின்னர், இந்நாடு, நான்கு ஜில்லாக்களாக வகுக்கப்பட்டும் அவையாவும் முன்னினும்பன்முறைநன்னிலையுற்றும், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்ததையும், வருகிறதையும் யாரே அறியார்?

பாண்டியதேச நாயக்கமன்னர் வரலாறு

முற்றிற்று.

---

§ History of Tinnevelly.

* A calm before a storm.

அநுபந்தம்.

நாயக்க மன்னர் கோடிவழி விவரம்.

நாகம நாயக்கர்—1559.

விசுவநாத நாயக்கர். 1559—1563.

குமாரகிருஷ்ணப்பநாயக்கர் என்ற பெரியகிருஷ்ணமநாயக்கர். 1563—1573.

கிருஷ்ணப்பநாயக்கர் என்ற பெரிய வீரப்பநாயக்கர். 1573—1595.

II விசுவநாத நாயக்கர். 1573—1595.

இலிங்கையநாயக்கர் என்ற குமாரகிருஷ்ணப்பநாயக்கர்.1595—1602.

விசுவப்பநாயக்கர் என்ற III விசுவநாதநாயக்கர்.1595—1602.

முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் 1602—1609.

முத்துவீரப்பநாயக்கர்.1609—1623. திருமலைநாயக்கர்.1623—1659. குமாரமுத்து[வீரப்ப] நாயக்கர்.

முத்து அளகாத்திரிநாயக்கர். 1659—1662.

சொக்கநாத நாயக்கர். 1662—1682.

அவரது மனைவி மங்கம்மாள்.1689—1704.

இரங்ககிருஷ்ண முத்துவீரப்பநாயக்கர். 1682—1689.

விஜயரங்க சொக்கநாதநாயக்கர். 1704—1731.

அவரது மனைவிமீநாக்ஷியம்மாள். 1731—1736.

விஜயகுமாரமுத்து திருமலைநாயக்கர்-சுவீகார புத்திரர்.

அநுபந்தம்.

இங்குக்காணப்படும் செய்யுட்கள் 'மதுரைத்திருப்பணிமாலை' என்னும் நூலிலமைந்தன. இந்தநூல் மதுரையில் பலரியற்றிய திருப்பணிகளை எடுத்துரைக்கின்றது.

விசுவநாத நாயக்கர்.

செஞ்சொல்புனை மதுரேசர் திருவால வாயிறைவர்
திருவுள மகிழ்ந்து புனையச்
செம்பொற் பதக்கமுட னானவா பரணமுஞ்
சேர்ந்தபரி கலமா தரும்

கஞ்சவயல் சூழுகொம் மட்டிமா தலையின்மேற்
கயல்குதிகொ டாத னூரும்
காக்கள்செறி யும்திருக் கானையும் பூகவயல்
காட்டுமே லைப்பரம்பும்

மஞ்சுதவழ் சோலைசூ ழிளமைநல் லூரையும்
மருவுமிந் திரவி மானம்
வளமையொடு பழமைபுதி தாகவே பொன்பூசி
மகிமையுட னேஉத வினான்

விஞ்சிவரு திருவடி தனைப்பொருது நிறைகொண்டு
மீனவனை வாழ்வித்தமால்
மேவுதென் கச்சநா யகன்விசுவ நாதனுயர்
வெற்றிப்ர தாப முகிலே.

அரியநாயகமுதலியார்.

அருமா தவஞ்செ யறுபத்துமூவ ரவர் மண்டப
மருவாரும் சோலை யறச்சாலை மண்டபம் வன்னியடி
முருகேசன் சொக்கற்கு வெள்ளிச்சிங் காதன முற்றும்செய்தான்
வருமா லரிய நயினா முதலி மதிமந்த்ரியே.

குமார கிருஷ்ணப்ப நாயக்கர்.

முத்தமிழ்க் கூடற் பதிச்சொக்க நாதர்க்கு முத்தளக்கும்
சித்திரக் கோபுரம் செங்கற் படையைச் சிறக்கச்செய்தான்
மத்தகப் போர்விச்வ நாதன் குமாரன் மநுமுறைமைக்
கொத்துறப் பார்புரக் குங்கிருஷ்ண பூப குணக்கொண்டலே.

விதிக்கு முகுந்தற்கு மெட்டாத சொக்கர்க்கு மேதினியோர்
துதிக்கும் கொடிக்கம்ப மண்டப மொன்று துலங்கச்செய்தான்

சதிக்கும் பரமன்னர் பொன்னூர் முடிகளைக் காலிலெற்றி
மதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழ்$க்ருஷ்ண வீரப்பனே.

அய்யர்சிங் காரச் செழுநீர்ப் புனல்வெள்ளி யம்பலமும்
செய்ய வடக்குத் திருக்கோபுர மும்செவ் வீச்சுரமும்
துய்ய திருமடைப் பள்ளியு மன்புடன் தோன்றச்செய்தான்
தையலர் மோகன வேள்கிருஷ்ண வீர சயதுங்கனே.

வாரிப் புவிபுகழ் *ஆயிரக் கான்மணி மண்டபமும்
ஏர்உற்ற மூர்த்தியம் மன்மண்டபமும் இரண்டாம்பிர
காரத் திருச்சுற்று மண்டப மும்கொடிக் கம்பத்துமுன்
வீரப்ப மண்டப மும்செய் தனன்கிருஷ்ண வீரப்பனே.

அல்லொத்த பூங்குழ லங்கயற் கண்ணம்மை ஆலயத்துள்
மல்லப்ப னுட்டுபொற் கம்பம்பழகிய வாறுகண்டே
நல்லிட்ட மாகப்பொன் பூசுவித் தானண்ண லாருக்கொரு
வில்லிட்டுப் போரை விலகிட் டருள்கிருஷ்ண வீரப்பனே.

முத்துவீரப்பநாயக்கர்.

தண்டரள நகையெங்க ளங்கயற் கண்ணம்மை
தனதுபா கத்தில் வாழும்
தக்கமது ராபுரிச் சொக்கநா யகர்திருச்
சந்நிதி விளங்கி யிடவே

கொண்டல்படி மகமேரு வரைதனைக் குத்திக்
குடைந்து வெளியாக்கி மற்றக்
குலகிரிக ளைத்தூண்க ளாகவே வெளியிற்
குறித்திடை நிறுத்திய தென

மண்டலந் தனிலுள்ள மண்டபக் குலதீப
மண்டபங் கட்டு நாயன்
மண்டப சிரோரத்ன மானவீர வசந்த
மண்டபம் கட்டு வித்தான்

வெண்டரள மணிவிசுவ நாதகிருஷ் ணயவீரன்
மெச்சும் விசுவப்ப னன்பால்
மேவுமுத் துக்கிருஷ்ண மகிபால னருள்முத்து
வீரப்பபூ பாலனே.

$ 'மதுரைத் திருப்பணி மாலை'யில் குமாரகிருஷ்ணப்ப நாயக்கருக்குக் 'கிருஷ்ண வீரப்ப' ரென்றும் பெயராம்.

* 'ஆயிரக்கால் மண்டபத்தை' அரியநாயக முதலியார் கட்டியதாய் பிறநூல்கள் கூறும்.

திருமலைநாயக்கர்.

தரணிபுகழ் மேருகிரி பலவுருவ வடுத்தநற்
சந்நிதா னத்தில் வந்த
தவமுற்ற தென்னநூற் றிருபத்து நாலுகால்
தன்னிலே எந்த நாளும்
திரமான புதுமையா மண்டபங் கட்டியே
சித்திரமு மெழுதி யந்தச்
செய்யமண் டபமணியும் மாலையென இருபாற்
சிறந்தமண் டபமியற்றிக்
குரவார் கருங்குழ லங்கயற் கண்ணம்மை
கொன்றையணி சொக் கேசனார்
கூடிவிளை யாடியும் வசந்தமெனும் நல்விழாக்
கொண்டருள வேசெய்தனன்
பரராசசேகரன் பரராச பூஷணன்
பரராச ராசதிலகன்
பரராசர் பணிமுத்து கிருஷ்ணப்ப பூபனருள்
பாலதிரு மலை பூபனே.
உரக்கவெகு ரொக்கங் கொடுத்துப் படங்குதா
ணுத்திர முதற் பழங்கல்
ஒடிந்தன பிடுங்கிவை மாயமைத் தூக்காரை
யோடுசீ ரண மகற்றி
அரைத்தசுண் ணம்பைவெல் லச்சாறு விட்டுநன்
றுய்க்குழைத் துச்செங்கலும்
அடுக்காப் பரப்பிக் கடுக்காயோ டாமலகம்
அரியதான் றிக்காயுமூழ்ந்
தொருக்கா விருக்கா விடித்துநன் னீரினி
லூறிய கடுஞ் சாறுவிட்
டேழிகா லங்களினும் அசையாத வச்சிரக்
காரையிட் டோங்கு மம்மை
சிரக்காலம் வாழவே மீனாட்சி கோயிலும்
செப்பமிடு வித்து நன்றாய்ச்
செய்வித்த புண்ணியம் சதகோடி புண்ணியம்
திருமலை மகீப னுக்கே.

"சங்கரர் எங்கள் மதுராபுரிச் சொக்கர் சந்நிதியிற்
பொங்கு கொடிக்கம்ப மாபலிபீடம்பொன் பூசுவித்தான்"

முனைவேல் விழியங் கயற்கண்ணி சந்நிதி முன்மடத்துள்
அனைவோர்க்கு மன்னமும் தோழியம்மாட னடைறக்குமறு
தினமே தினியில் நடக்கும்படிக்கீக் திசையுங் கொண்டான்
புனவேலி தந்தனன் கச்சித் திருமலை பூபதியே.

நன்னுதலங்கயற் கண்ணிதனக்கு நலம்பெறவே
உன்னதமாகும் கொடிக்கம்பம்மாபலி பீடமுடன்
சொன்னமளித்துப்பொன் பூசுவித்தான்சுக போசனெங்கள்
மன்னன் திருமலை பூபன் மதுரை வரோதயனே.

பின்னியசெஞ்சடைச் சொக்கர்தம்ஆறுகாற் பீடத்தினும்
இன்னெழில் அம்மைதன் ஆறுகாற்பீடம் இசையினுந்தான்
இன்னருள்பெற் றருளும்துவார பாலரையேஅமைத்தான்
பொன்னணிதாரார் புயத்தான்திருமலை பூபதியே.

மகரமெறி கடல்ராம வாளியால் முனிகையான்
மாறனுர் தாட்சிலம்பால்
மாதவ னெடுத்தவ வதாரமீ னத்தினல்
வருசுப்ர மணியன் வேலால்
தகர்பட்டு வெர்துயய மாய்ப்பின்ன மாகிமிகு
தாழ்வாகி யுடலம் வற்றித்
தரைபட்டு மொருகால நிறைவுற்று மிப்படித்
தளர்ந்துகடை பட்டவதனற்
புகலரிய சத்தசா கரமுமத னடுவிலே
புவனநவ கண்டங்களும்
பொன்மேரு நிகர்மேவு மண்டபமு மதுரேசர்
புகழநவமாய்ப்புதுக்கித்
திகழ் செய்திரு மலைநாயகர்சமுத் திரமெனும்
தெப்பக் குளங்கண்டனன்
சிகரபுய பலவிசய சுமுகமுத்துக் கிருஷ்ண
திருமலை மகிபாலனே,

முத்து அளகாத்திரிநாயக்கர்.

கங்கையிம சேதுவும் புகழ்மதுரை வைகையின்
கரைதிரும லேந்த்ர புரதக்
கனமான புதுவீதி அணிகவோ ராலயம்
கனகவரை யோற்சி கரமும்

புங்கவுட னேசெய்து லிங்கமன் பெயர்பெறப்
புந்தி மகிழ்வுடன் முடித்து
போர்முகத் தந்தியும் கந்தவேள் தன்னையும்
புகழுமெழில் விசுவநாதர்

பங்கில்வள ரும்விசா லாட்சிசங் கீசுரர்
பண்புசெறி சண்டேச்சுரர்
பரிவினுட னிவையெலாம் பிரதிட்டை செய்துமன்
பாகவபி டேகபூசை

அங்காங்க மாய்நடந் திடவில்லி யூர்க்கு
லாஞ்சேரி யுங்கொடுத்தான்
அருள்முத்து வீரப்பன் வரபுத்ர னென்னுமுத்
தழகாத்ரி மகிபாலனே.

விஜயரங்கசொக்கநாத நாயக்கர்.

தென்னவன் மகிழும் கயற்கண்ணி கோயில்
திருப்பள்ளி யறையின் முன்பு
சிங்கார அறைகட்டி அபிடேக மாதிச்
சிறப்புகள் விழாபூசையும்

அன்ன அபிடேகவஸ்த்ர மாவாடை வரிசையும்
வளமையொடு கொண்டருளவே
வாகான செந்நெல்வகை வில்லா புரத்தையும்
மாதர்முத் தம்மைபேரால்

நன்னயத் தொடுநலத் தார்கள்பரி சமமாக
நண்புடனே உதவினன்
ரங்ககிரிட் டிணமுத்து வீரனருள் விசயரங்
கச்சொக்க நாகேந்திரனே.

குறிப்பு:—இதிற்சேர்க்கப்பெற்ற நாயக்கமன்னரின் உருவப்படங்கள் மதுரைப் புதுமண்டபத்துக் கற்சிலைகளினின்று செய்யப்பெற்றன.

சில விஷய திருத்தங்கள்.

பக்கம் 27. பத்தி 1. ராயகோபுரம் என்பதற்குக் கற்கோபுரம் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் "இராயகோபுரம் என்பது அதன் பெயரென்றும், தமது சக்கரவர்த்தியின் ஞாபகத்திற்காக இம்மன்னர் இக்கோபுரத்தைக்கட்டினர்" என்றும் கூறுதலே சிறப்புடைத்து.

பக்கம் 29 வரி 13 & 14. Ancient Monument Preservation Act Tablet என்க.

பக்கம் 30 வரி 9 ஆரம்பத்திலிருந்தே என்பதை நீக்கிப்படிக்க.

பக்கம் 45 வரி 2 "அருளானந்தம்" என்பதை "*அருளானந்தம்" என்க.

பக்கம் 45 வரி 18 "ஒருவர்" என்பதை "நேல்சன்துரை" என்க.

பக்கம் 27 வரி "திருமலைநாயக்கரிடம் பணமில்லாததாலோ" என்பதை "திருமலை நாயக்கர் தொடுத்த சண்டைகளின் இடையூற்றலோ" என்க.

பக்கம் 41 தலைப்பு "1680—1704" என்க.

பக்கம் 53 வரி "வருஷம் 1704" என்க.

பக்கம் 54 அதி. 13 தலைப்பு—"1704—1731" என்றுதிருத்துக.